313

# உமா வாசகம்

ஏழாம் புத்தகம் — சிறப்புப் பகுதி

313
4-56

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - NOV 1956
MADRAS

வித்துவான்
இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா

உமாதேவன் கம்பெனி
சென்னை.

TB
031(7)
N56
89841

# உமா வாசகம்

## ஏழாம் புத்தகம்

### சிறப்புப் பகுதி

[இரண்டாம் பாரத்திற்கு உரியது]

1951௵ ஜூன்௴ 26௳ வெளியிடப்பட்ட புதிய பாடத்
திட்டத்தின்படி எழுதப் பெற்றது.

வித்துவான் இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா,
*தமிழாசிரியர்,*
*கிறிஸ்தவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி, சென்னை.*

**உமாதேவன் கம்பெனி,**
**109-c, மவுண்டு ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-18**

பதிப்புரிமை] 1956 [விலை அணா, 10

முதற்பதிப்பு : 1951
இரண்டாம் பதிப்பு : 1952
மூன்றும் பதிப்பு : 1954
நான்காம் பதிப்பு : 1956
திருத்தப் பதிப்பு : அக்டோபர், 1956

This book is printed on Double Demy, 32 lbs. White Printing paper

89841
TB
031(7)
N56

# திருத்தப் பதிப்பின் முகவுரை

முதன்முதல் 1951-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்நூல் இப்போது பாட புத்தகங்கள் சம்பந்தமாக அரசியலார் அண்மையில் வெளியிட்டுள்ள புது விதிகளுக்கிணங்கத் திருத்தங்கள் பல செய்து வெளியிடப்படுகிறது.

இத்திருத்தப் பதிப்பு வெளியிடுவதில் எமக்குத் துணையா-யிருந்து, ஏடுகளைப் பரிசோதித்து உதவிய நண்பர் திருவாளர் **வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர்களுக்கு எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்நூலின் முன் பதிப்புக்கள் போலவே இப்பதிப்பும் தமிழ் நாட்டு ஆசிரிய அறிஞரின் மதிப்புக்குரியதாகும் என்று நம்பு-கிறோம்.

4—10—1956 **பிரசுரகர்த்தர்**

THE JUPITER PRESS PRIVATE LTD., MADRAS-18.

# முதற்பதிப்பின் முகவுரை

அண்மையில் வெளியிடப்பட்ட அரசாங்கத்தாரின் பாடத் திட்டப்படி போது, சிறப்பு என இரு வகையாக மொழிகள் பயில்விக்கப்படுகின்றன. ' உமா வாசகம் ' என்னும் பெயருடன் வெளிப் போதரும் நூல் வரிசையில் முதல் மூன்று படிவங்களுக்குச் சிறப்பு வகைப் பகுதிகள் வெளி வருகின்றன. இவை சிறப்பு வகைக்கு ஏற்ற முறையில் அரசாங்கத்தாரின் பாடத் திட்டத்தையும், அச்சிறப்பு வகைக்கு அளித்துள்ள கால முறையையும் தழுவி எழுதப்பட்டுள்ளன.

ஒவ்வொரு புத்தகமும் பொது வகையைத் தழுவிச் சிறப்பு வகைக்கு ஏற்றவாறு பாடங்களையும் பயிற்சிகளையும் கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு புத்தகமும் ' வளர்ச்சி முறை 'யைப் பின்பற்றியுள்ளதைப் பாடங்கள் எழுதப்பட்டுள்ள முறையாலும், பயிற்சிகளின் அமைப்பாலும் நன்கறியலாம். நடையும் சொல்லாட்சியும் புத்தகந்தோறும் உயர்ந்து செல்வதும் நோக்கத் தக்கது. மொழிப் பயிற்சி, கட்டுரைப் பயிற்சி முதலிய பகுதிகள் புத்தகந்தோறும் மாணவர்கட்கு விளங்கும் வகையில் எழுதப்பட்டுள்ளன. சிறப்பு வகைப் பாடங்கள் பொது வகையினும் சிறப்பான அறிவையும் சிந்திக்கும் ஆற்றலையும் பெருக்குவனவாய் அமைந்துள்ளன. ஆங்காங்கு ஏற்ற படங்களும் புத்தகங்களை அணி செய்கின்றன.

ஒவ்வொரு புத்தகத்திலும் சொல்லகராதி தரப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, அரும்பதங்களுக்குப் பொருள் காணுமாறு மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதும், அதனால் மாணவர்கள் அகராதி பார்க்கும் முறையை உணர்தல் வேண்டும் என்பதும் பாட அமைப்பின் நோக்கமாகும்.

ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் தெளிவாகவும், அறிவை விருத்தி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அப்பயிற்சிகளைப் பயில்வதால் மாணவர்கள் பாடங்களை ஐயமின்றி உணரலாம்; சோதனைக்கு அஞ்ச வேண்டுவதில்லை. அப்பயிற்சிகளை மாணவர்கள் பள்ளியிலோ, வீட்டிலோ பயிலுமாறு செய்து, ஆசிரியர்கள் கண்காணிப்பார்களாயின், அவை மாணவர்க்குப் பெருநலமளிக்க வல்லனவாகும். செய்யுட்பகுதிக்குக் குறிப்புரையும் தரப்பட்டுள்ளது. பல்வகையாலும் மாணவர்க்குச் சிறப்பான முறையில் பயன் தர வல்ல இச்சிறப்பு வகை உமா வாசக புத்தகங்களைப் பள்ளிகளில் பாட புத்தகங்களாக்கி மாணவர்கள் பயன் பெறுமாறு ஆவன செய்ய ஆசிரியர்களை வேண்டுகின்றேன்.

சென்னை,
12—10—51.

இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா

# உள்ளுறை

## உரைநடைப் பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | புத்தர் பிரான் ... ... | 1 |
| 2. | கரும்பும் சர்க்கரையும் ... ... | 10 |
| 3. | பூண்டி அரங்கநாத முதலியார் ... ... | 15 |
| 4. | பணம் ... ... | 21 |
| 5. | மாறவர்மன் அரிகேசரி ... ... | 28 |
| 6. | இரும்புக் கைத்தொழில் ... ... | 34 |
| 7. | பாண்டித்துரைத் தேவர் ... ... | 40 |
| 8. | தமிழ் மக்கள் குடியேற்றம் ... ... | 47 |
| 9. | பாரதியார் ... ... | 53 |


## செய்யுட்பகுதி


I. கடவுள் வாழ்த்து :
1. தேவாரம் ... ... 61
2. திவ்வியப்பிரபந்தம் ... ... 61

II. நீதி :
1. நன்னெறி ... ... 61
2. நான்மணிக் கடிகை ... ... 62
3. சிறுபஞ்ச மூலம் ... ... 62
4. நீதி நெறி விளக்கம் ... ... 62
5. அறநெறிச் சாரம் ... ... 63
6. நீதி நூல் ... ... 63

III. காதை :
1. தீயவன் நல்லொழுக்கம் பெற்றது ... ... 63
2. மைனாவும் முயலும் ... ... 66

IV. பல்சுவை :
1. பணம் ... ... 69
2. தமிழ் ... ... 69
3. உலக இயல் ... ... 69
4. உலோபர் ... ... 69
5. தெய்வம் ... ... 70
6. தூது ... ... 70

செய்யுட்பகுதிக் குறிப்புரை 71
அகராதி 78

## நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தா்யக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

# நாட்டு வணக்கம் - பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்
நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி!

# உமா வாசகம்

(ஏழாம் புத்தகம்)

சிறப்புப் பகுதி

## 1. புத்தர் பிரான்

1. உலகில் மக்கள் நன்னெறி பற்றி ஒழுகி, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களைப் பெற்று உய்ய வேண்டும். அவ்வுறுதிப் பொருள்கள் நான்க–னுள் வீடு என்பது மிகச் சிறந்தது; அதுவே மக்களாய்ப் பிறந்தவர்கள் அடைதற்குரிய முடிவான எல்லை. வீடு என்பதை **மோட்சம்** என்றும் **முத்தி** என்றும் கூறுவர். வீடு என்பது மனத்தால் நினைத்தலும், வாயால் மொழிதலும் இயலாத நிலை. ஆதலின், அது சிந்தையும் மொழியும் செல்லா நிலையினது என்பர். அதனை அடைவதற்குப் பல நெறிகளை ஆன்றோர் வகுத்துள்ளனர். அந்நெறிகளை **மதம்** என்னும் பெயரால் வழங்குவர். அத்தகைய மதங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று **பௌத்தம்**. அதனைத் தோற்று–வித்தவர் **புத்த தேவர்.**

2. பாரத பூமி, புண்ணிய பூமி. இப்பெருந்தேசத்தில் புண்ணியப் பேரருளாளரும் பேரறிஞருமான பலர் தோன்றி–யுள்ளனர். பண்டு பாரத பூமியில் **உத்தரகோசலம்** என்னும் தேசம் இருந்தது. அதன் தலை நகர் **கபிலவாஸ்து** என்பது. அத்தலை நகரிலிருந்து அத்தேசத்தை ஆண்டு வந்த மன்னன், **சுத்தோதனன்** என்பவன். அவன் சாக்கிய குலத்தில் தோன்றியவன்; கௌதம குடியைச் சார்ந்தவன். கோலியர் குலம் என்பது மற்றொரு மன்னர் குலம். சுத்தோதனன் கோலியர் குல மன்னர் இருவர் புதல்வியரை மணந்துகொண்–டான். அவருள் **மாயா தேவி** என்பாள் ஒருத்தி; மற்–றொருத்தி, **கௌதமி** என்னும் பெயரினள். இரு மனைவி–யரைப் பெற்றும் சுத்தோதனன் நெடுங்காலம் மக்கட்–

பேறின்றி வருந்தினன் ; தான் வழிபடுந்தெய்வங்களை அன்போடு பூசித்து வணங்கினன். மாயா தேவி கருக்கொண்டாள். அப்போது அவளுக்கு வயது நாற்பத்தைந்து. குலத்தை விளக்கக் குழந்தை பிறக்குமென்று சுத்தோதனனும் கௌதமியும் அளவிலா மகிழ்ச்சி அடைந்தனர்.



3. வயிறு வாய்த்த மாயா தேவி அழகிய காட்சிகளைக் கண்டு இன்புற்றிருக்க வேண்டுமென்று சுத்தோதனன் அவளை **உலும்பினி** என்னும் சோலையில் இருக்கச் செய்தனன். அப்பூம்பொழிலில் மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள், நீர் நிலைகள், மான்கள், மயில்கள் முதலிய அனைத்தும் இருந்தன. அவற்றையெல்லாம் கண்டு களித்து மாயா தேவி இன்புற்றிருந்தாள். மாயா தேவி வைகாசி மாதம் பூர்ணிமைத் தினத்தில் ஓர் ஆண் மகவை ஈன்ருள். மைந்தன் பிறந்ததைக் கேட்ட சுத்தோதனனும் கௌதமியும் வரம்பிலா

மகிழ்ச்சியுற்றனர். ஆனால், அவர்கள் மகிழ்ச்சிக்கு இடையூருய்க் குழந்தை பிறந்த ஏழாம் நாளில் மாயா தேவி இவ்வுலக வாழ்வை நீத்தாள்.

4. கௌதமி குழந்தையை அன்போடு வளர்த்து வரலானுள்; சுத்தோதனன் அக்குழந்தைக்குச் **சித்தார்த்தன்** என்று பெயரிட்டுச் சிறப்பாக வளர்த்து வரலானுன்; தன் மனைவி பிரிந்ததால் நேர்ந்த துக்கத்தைக் குழந்தையைக் கண்டு மறந்து ஆறுதலடைந்தான். சித்தார்த்தரை யாவரும் கௌதமர் என்ற குடிப் பெயரால் வழங்கி வந்தனர். செல்வக்குழந்தையான கௌதமர், ஒரு குறைவுமின்றி, ஆண்டுகள் நிரம்பப் பெறுந்தோறும் அரசகுமாரர்களுக்குரியவற்றைச் செய்யப் பெற்ருர்; கௌதமர் அரசகுலத்துக்குரிய கலைகளையெல்லாம் கற்கலானுர். அன்பு, அருள், இரக்கம் முதலிய நற்குணங்கள் அவரிடம் இயல்பாய் அமைந்தன. கௌதமர் கலைகளையெல்லாம் கசடறக் கற்ருர்.

5. ஒரு சமயம் **அசிதர்** என்னும் முனிவர் ஒருவர் அரண்மனைக்கு வந்தார். அவர் கௌதமரைக் கண்டு, அவரிடம் இலங்கிய பல குறிகளைக் கவனித்து, 'இம்மைந்தன் உலக இன்பத்தைத் துறந்து துறவு பூண்டு உலக மக்களைக் காப்பவனுய் விளங்குவான்,' என்று கூறினுர். அதனைக் கேட்ட சுத்தோதனன் மிக வருந்தினுன். அந்நாள் முதல் சுத்தோதனன் உலக வாழ்க்கையிலேயே கௌதமர் மனம் ஊன்றுமாறு செய்யப் பல முயற்சிகள் செய்தான்; அவர் கண்ணில் யாதொரு துன்பமான நிகழ்ச்சியும் தோன்ருதபடி காத்தான். மக்களுக்கு உண்டாகும் பிணி, மூப்பு, சாக்காடு என்பவை பற்றி அவர் மனத்தில் ஒன்றும் தோன்ருமலிருக்க மன்னன் செய்தவை பல. கௌதமர் இன்பச் சூழ்நிலையின் இடையிலே, 'துன்பம் என்பது மக்களுக்கு உண்டு,' என்பதை அறியாதவராய் வளர்ந்து, மணப்பருவம் எய்தினுர். சுத்தோதனன் தன் மைத்துனன் மகளாகிய **யசோதரை**யைக் கௌதமருக்கு மணம் புரிவித்தான். கௌதமர் இன்பமாய் அரண்மனையில் வாழ்ந்து வந்தார்.

6. ஒரு சமயம், கௌதமர் தந்தையைக் காணச் சென்ருர். வழியில் அவர் கொடிய நோயாளன் ஒருவனைக் கண்டார்.

மற்ெருரு சமயம், அவர் வெளியே சென்ற பொழுது ஆண்டில் மிக முதிர்ந்து வருந்திய முதுமையாளனைக் கண்டார். பிறி-தொரு சமயம், கௌதமர் குதிரையேறிச் சென்ற பொழுது பிணம் ஒன்றை எதிரில் கண்டார்; இவற்ருல் மனிதனுக்குப் பிணி, மூப்பு, சாக்காடு என்பன தவிர்த்தலாகாத துன்பங்கள் என்பதையும், உலக வாழ்வு நிலையற்றது என்பதை-யும் நன்ருக உணர்ந்தார்; இவற்றிற்குட்படாத நல்-வழியை அறிந்து தம்மையும் உலக மக்களையும் உய்விக்க எண்ணினர். அவ்வாறு சிந்தனையுற்றிருக்கையில் முனிவர் ஒருவர் கௌதமர் முன் தோன்றித் துறவின் பெருமையை எடுத்துக் கூறிச் சென்ருர். பின்பு கௌதமர் துறவு பூணற்கு உறுதி கொண்டு, அதனைத் தந்தைக்குக் கூறினர். தந்தை உடன்படுவனே ? உலக வாழ்க்கையில் தன் மைந்தரை அழுந்தும்படி செய்ய, மன்னன் பல முயற்சிகள் செய்தான். அவை பயனற்றனவாயின. கௌதமர் துறவு பூண உறுதி கொண்டார். அந்நிலையில் அவர்க்கு ஓர் ஆண் மகவு பிறந்தது.

7. கௌதமர் அன்றிரவே உலக இன்பத்தைத் துறக்கத் துணிந்து, **சந்தகன்** என்பானை அழைத்துக் குதிரையைக் கொண்டுவரச் செய்தார். இறுதியாக ஒரு முறை தம் மனைவி யசோதரையையும் புனிற்றிள மகனையும் பார்த்துவிட்டு, அரண்மனையை விட்டு வெளியேறினர். கௌதமரும் சந்தக-னும் குதிரையேறி, மாலை வந்திடுமுன், **அனோமா நதி**க் கரையை அடைந்தனர். அங்குக் கௌதமர் தாம் அணிந்திருந்த மணி மாலையைச் சந்தகனுக்குப் பரிசாக அளித்து, தம் முடி மணியைச் சுத்தோதனனுக்குக் கொடுக்கும்படி கூறி, அவனை அனுப்பினர். சந்தகன் பல புகன்றும் பயனில்லா-தொழிய, அவன் அரண்மனையை அடைந்து, நிகழ்ந்ததை அரசனுக்கும் மற்றவர்க்கும் அறிவித்தான். யாவரும் மன-முளைந்து, துக்கக் கடலில் ஆழ்ந்தனர்.

8. கௌதமர் தம் உடை வாளால் தம் மயிர் முடியை அறுத்தெறிந்தார்; ஆங்கு எதிர்ப்பட்ட வேடனெருவனுக்குத் தம் பட்டாடையை அளித்து, அவனிடமிருந்து துவராடை பெற்றுத் தரித்துக்கொண்டார்; காட்டில் திரிந்து பல முனி-

வர்களைக் கண்டு உண்மை நெறியை விளக்குமாறு வேண்டினர். ஒரு முறை கௌதமர் **நைரஞ்சரை** என்னும் ஆற்றின் கரையில் ஒரு போதி மரத்தடியில் அமர்ந்து, உணவும் உறக்கமும் துறந்து, இருபத்தெட்டு நாள் தவம் புரிந்தார்; இருபத்தொன்பதாம் நாள் ஆங்கு வந்த இடையர் மகளான **சுஜாதை** என்பவள், தன் வழிபடு தெய்வத்திற்கு நிவேதனப் பொருளாகக் கொணர்ந்த பாற்சோற்றை வாங்கி உண்டார். அன்று அவர் பழம்பிறப்புணர்ச்சியும் தத்துவ ஞானமும் பெற்றார். முற்பிறப்பில் பாவம் செய்தவர் இப்பிறப்பில் வருந்துவதையும், ஜீவகாருணியமுடையவர் இன்பமுற்று வாழ்வதையும் அவர் அறிந்தார். பன்னெடுநாட்களாக நாடிய உண்மைப் பொருள் அவருக்கு விளங்கியது. அன்று முதல் அவர் **புத்தர்**, **ததாகதர்** என்னும் பெயர்களால் வழங்கப்படுவாராயினர்.

9. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,' என்பது ஆன்றோர் கருத்து. எனவே, புத்தர் தாம் உணர்ந்த உண்மைகளைப் பிறருக்குப் போதிக்க எண்ணம் கொண்டார். ஐந்து மாத காலத்திற்குள் அவருக்குச் சில துறவிகள் சீடர்களானார்கள். அவர்கள் கூட்டமே '**புத்த சங்கம்**' எனப்பட்டது. புத்தர் தம் சீடர்களுக்குத் தாம் அறிந்த உண்மைகளை உபதேசித்து, சமய போதனை செய்ய அவர்களைப் பல நாடுகளுக்கும் அனுப்பினர். மழை காலத்தில் பௌத்த சங்கத்தார் ஒரு வனத்தில் தங்கியிருந்தனர்; பிற காலங்களில் பல நாடுகளுக்கும் சென்று தம் கொள்கையைப் பரப்பினர். அக்காலத்தில் புத்தர் பல அற்புதத் தெய்விகச் செயல்களைச் செய்தனர் என்றும் கூறுவர். புத்தர் அக்காலத்தில் சிறந்து விளங்கிய மகத தேச மன்னனை **பிம்பிசாரன்** என்பவனையும் பௌத்தனாக மாற்றினர். புத்தருக்குச் சீடர் பலராயினர். புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட புத்த மதமும் பரவலாயிற்று.

10. சுத்தோதனன் வேண்டுகோளின்படி புத்தர் கபிலவாஸ்துவிற்குச் சென்றார். சுத்தோதனன் அவரை அழைத்து உபசாரம் செய்தான். புத்தர் மனைவி யசோதரையும் மகன் **இராகுல**னும் வந்து பணிந்தனர். தந்தை, மனைவி, சிற்றன்னை, மகன் முதலியவர்கட்குப் புத்தர் உபதேசம் செய்து, அவர்-

களைத் தம் சங்கத்தில் சேர்த்துக்கொண்டனர். சுத்தோதனன் இறந்ததும் புத்தர் தந்தைக்குரிய ஈமச் சடங்குகளைச் செய்தனர். கௌதமியும் யசோதரையும் துறவறம் மேற்கொண்டு பௌத்த பிக்குணிகளாயினர்.

11. புத்தர் பல நாடுகளுக்கும் சென்று தருமோபதேசம் செய்தார். அவர் பெருமை யாவர்க்கும் புலனாயிற்று. ஒரு சமயம் ஒரு பெண் தன் இறந்த குழந்தையைத் தோளில் சுமந்துகொண்டு வந்து, அவரடியில் கிடத்தி வணங்கித் தன் ஒரே மகனுக்கு உயிரூட்டும்படி வேண்டினாள். புத்தர் அவளுடைய அறியாமையைப் போக்கக் கருதி, " அம்மா, உன் குழந்தைக்கு உயிரளிப்பேன். ஆனால், ஒரு பிடிக் கடுகு வேண்டும். அதை நீ இது வரை ஒருவரும் மரணமடையாத வீட்டுக்குச் சென்று வாங்கி வருக, " என்றார். அப்பெண் விரைந்து சென்றாள். 'ஒருவரும் இறவாதவர் வீட்டிலுள்ள கடுகு வேண்டும்,' என்று அப்பெண் கூற, 'இறவாதார் வீடு இவ்வுலகில் இல்லை,' என்று அவரவர் கூறினர். 'பிறப்பு உண்டாயின், இறப்புமுண்டு. அது தவிர்க்க முடியாதது,' என்பதை அப்பெண் அறிந்துகொண்டு, கடுகு பெறுமலே புத்தரை அடைந்தாள். புத்தர் அவளுக்கு நல்லுபதேசங்களைச் செய்தார்.

12. ஞானம் பெற்ற பின் புத்தர் நாற்பத்தைந்து ஆண்டுகள் நாடுகள் பலவற்றிற்கும் சென்று, அறவுரைகளைப் புகன்று வந்தார். பல்லாயிரவர் புத்த மதத்தைத் தழுவினர். மகத தேசத்தில் பௌத்தம் வேரூன்றியது; உலகெங்கும் பரவியது. புத்தர் எண்பது வயது வரை இவ்வுலகில் வாழ்ந்தார். அவர் தம் வாழ்நாள் இறுதி குறுகியது கண்டு, தம் சீடர்களுக்குத் தருமோபதேசங்களைச் செய்து, சமாதி கூடி, நிருவாணம் அடைந்தார். அவர் நிருவாணம் அடைந்த காலம் ஈசான சகாத்தம், 148–ஆம் ஆண்டு, வைகாசி மாதம், பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய செவ்வாய்க்கிழமையாகும் என்பர்.

13. புத்தரின் அரிய உபதேசங்களைக் கொண்ட நூல் '**மகா சூத்திரம்**' எனப்படும். சாதி வேற்றுமையின்மையும், யாவரும் சமம் என்பதும், அன்பு, சீவகாருணியம் முத–

லான நற்பண்புகளும் அவர் உபதேசங்களில் மிளிர்கின்றன. உலகில் வாழும் உயிர்களுக்காகப் பாடு பட்டவர் புத்த தேவர். அவரால் தோற்றுவிக்கப்பட்ட மதம் **பௌத்தம்.** தன்னடக்க-மும் தன்னைச் சீர்திருத்திக்கொள்ளுதலும் புத்த மதத்தில் முதன்மையானவையாகும். '**ஓர் உயிரையும் துன்புறுத்தலாகாது; பிறர் பொருளை அபகரிக்கலாகாது; பொய் பேசலாகாது; கள் உண்ண-லாகாது; தீய வழியில் ஒழுகலாகாது,**' என்பன அவர் உப-தேசித்த **பஞ்ச சீலங்கள்.** பெற்றோரும் மக்களும், ஆசிரியனும் மாணவனும், கணவனும் மனைவியும், முதலாளியும் வேலைக்-காரனும், இல்லறத்தானும் துறவறத்தானும் ஒழுக வேண்டிய முறைகளை அவர் நன்கு விளக்கியுள்ளார். அவருடைய போதனைகளைப் பின்பற்றி ஒழுகினால், அனைவரும் நல்வாழ்வு எய்தலாம்.

14. இந்நாளில் உலகில் மூன்றில் ஒரு பங்கு மாந்தர் புத்தர் கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகுகின்றனர். புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட புத்த மதம் **சீனா, ஜப்பான், நேப்பாளம், திபெத்து, அஸ்ஸாம், பர்மா, இலங்கை** முதலான இடங்களிலும் இந்தியாவிற்சில இடங்களிலும் பரவி-யுள்ளது. பௌத்தர்களுக்கு முக்கியப் புண்ணிய ஸ்தலமான **புத்த கயா**வும் நம் பாரத நாட்டிலேதான் உள்ளது. புத்த மதத்தைப் பரப்பியவர்களுள் மௌரிய வமிச மன்னர்களாய் மகத தேசத்தை ஆண்டு வந்த பிம்பிசாரனும் அசோகரும் சிறந்தவர் ஆவர். அசோகர் புத்தர் அருளிய அறநெறிகளைக் கற்களில் பொறித்து வைத்துப் போற்றினர்.

**அரும்பதம் : பொருள் காண்க :**

| | | |
|---|---|---|
| *நன்னெறி* | *சூழ்நிலை* | *அற்புதம்* |
| *சிந்தை* | *உய்விக்க* | *தெய்விகம்* |
| *வருத்தல்* | *துறத்தல்* | *உபதேசம்* |
| *பண்டு* | *புனிற்றிளமை* | *சடங்கு* |
| *இடையூறு* | *பரிசாக* | *சமாதி* |
| *இலங்கிய* | *துவராடை* | *நிருவாணம்* |
| *மூப்பு* | *தத்துவ ஞானம்* | *மிளிர்தல்* |
| *சாக்காடு* | *சமயபோதனை* | *சீலம்* |

## சிறு விடை வினுக்கள் :

1. மக்கள் எவற்றைப் பெறுதல் வேண்டும் ?

2. வீட்டைப் பற்றி நீ அறிவதென்ன ?

3. சுத்தோதனன் யார் ? அவன் மனைவியர் யாவர் ?

4. புத்தர் பிறப்பைப் பற்றி நீ அறிவது யாது ?

5. அசிதர் சுத்தோதனனுக்குக் கூறியதென்ன ? அரசன் என்ன செய்தான் ?

6. கௌதமர் துறவு கொள்ளக் காரணம் யாது ?

7. 'புத்தர்' என்னும் பெயர் கௌதமருக்கு எப்பொழுது உண்டாயிற்று ?

8. புத்தர் காலத்து மகத நாட்டு மன்னன் யார் ?

9. மகனை இழந்த தாய்க்கு ஞானமுண்டாகுமாறு புத்தர் செய்த உபாயம் யாது ?

10. 'மகா சூத்திரம்' என்பது எதற்குப் பெயர் ?

11. புத்த மதம் போதிப்பன யாவை ?

12. புத்த மதத்தைப் பரப்பியவர் யாவர் ? எப்படி ?

13. புத்த மதம் எங்கெங்குப் பரவியுள்ளது ?

## கட்டுரைப் பயிற்சி :

1. 'புத்த மதமும் அதன் கொள்கைகளும்' என்பது பற்றிப் பதினைந்து வரிகள் எழுதுக.

2. 'புத்தர் ஞானம் பெறல்' என்பது பற்றி எழுதுக.

3. 'புத்த மதம் பரவிய வரலாறு' என்னும் தலைப்பமைத்து, மூன்று பத்திகள் எழுதுக.

## பயிற்சி—1

1. உனக்குத் தெரிந்த மதங்களையும், அவைகளைத் தோற்று-வித்தவர்களையும் குறிப்பிடுக.

2. கீழ் வருவன முறை மாறியுள்ளன; சரி செய்க :—

| | |
|---|---|
| புத்தர் | —மாத்துவ மதம் |
| ஏசுநாதர் | —சீக்கிய மதம் |
| முகம்மது நபி | —வைணவ மதம் |
| சங்கரர் | —இஸ்லாம் மதம் |
| இராமானுசர் | —சமண மதம் |
| மத்துவாசாரியர் | —கிறிஸ்தவ மதம் |
| குரு நானக்கு | —பௌத்த மதம் |
| வர்த்தமான மகாவீரர் | —அத்துவைத மதம் |

3. இப்பாடத்தினால் துறவு கொள்வார் நிலையைப் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

## பயிற்சி—2

1. 'அதனைத் தோற்றுவித்தவர் புத்த தேவர்.'—இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறுக.

2. மேலே குறித்த வாக்கியத்திலுள்ள செயப்படு பொருளை எழுவாயாக அமைத்து வாக்கியத்தை மாற்றி எழுதுக.

3. 'புத்த தேவர்' என்பதை எழுவாயாக அமைத்து வாக்கியத்தை மாற்றி எழுதுக.

## பயிற்சி—3

1. நன்னெறி, வகுத்தல், சூழ்நிலை, மிளிர்தல், அற்புதம்—இவைகளை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

2. கசடற, நன்னெறி, குதிரையேறி, பட்டாடை—இவைகளைப் பிரித்துக் காட்டுக.

3. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.'—இதன் பொருளைத் தெளிவாக விளக்குக.



## 2. கரும்பும் சர்க்கரையும்

1. 'நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்,' என்பது நம் நாட்டுப் புலவர் மொழி. நெல்லும் கரும்பும் விளையும் நாடு, செழுமையும் செல்வச் சிறப்பும் உடையதாகும். நெல்லும் கரும்பும் நீர் வளம் மிகுந்த, வெப்பம் மிக்க நாடுகளில் பயிராவனவாகும். கரும்பு நம் நாட்டிற்கு வந்த வரலாற்றைத் தமிழ் நூல்களைக்கொண்டு ஆராயும் பொழுது அஃது **அதியமான்** என்ற வள்ளலின் முன்னோர்களால் கொண்டு வரப்பட்டது என்பதை அறிகிறோம். இஃது,

" அந்தரத்து
அரும்பெறல் அமிழ்தம் அன்ன
கரும்புஇவண் தந்தோன் "

" அரும்பெறல் மரபில் கரும்புஇவண் தந்தோன் "

என்று கூறப்படுதலால் புலப்படும்.

2. கரும்பு பாத்தியில் வரிசையாயமைந்து வேலி போல வளரும். கரும்பின் பூ வெண்மையாய், வேலாயுதம் போல

இருக்கும். விநாயகக் கடவுளுக்குக் கரும்பில் விருப்பம் அதிகம்.

> " கரும்பும் இளநீரும் கட்டிக் கனியும்
> விரும்பும் விநாயகன் "

என்பதால் அதனை அறியலாம். யானைகளுக்குக் கரும்பு மிகவும் விருப்பமானதாகும்.

3. கரும்பு தமிழகத்தில் மிகுதியாகப் பயிராகின்றது. கரும்பு, மூங்கில், நாணல் என்பவற்றின் இனத்தைச் சேர்ந்தது. இதன் மேற்பட்டை தடிப்பானது. இதன் இலை நீளமாயும், சுரசுரப்பாயும், கூரிய ஓரங்களை உடையதாயும் இருக்கும். கரும்பின் நீண்ட தண்டினைக் கருப்பங்கழி என்பர். அந்நீண்ட தண்டில் பல கணுக்களைக் காணலாம். கரும்பின் அடிப்பாகம் மிகவும் இனிப்பாகவும், மேலே செல்லச் செல்லத் திதிப்புக் குறைந்தும் காணப்படும். 'பெரியவர் நட்பு, கரும்பை நுனியிலிருந்து தின்று வருபவன் முதலில் குறைந்த இனிப்பும் பின்பு அடி நோக்கிச் செல்லச் செல்ல மிக்க இனிப்பும் அடைவது போல, முதலில் நெருக்கமும் இன்பமும் இல்லாதது போலத் தோன்றிக் காலம் செல்லச் செல்ல நெருக்கமும் நலமும் விளைப்பதாகும். ஆனல், கீழோர் நட்பு, கரும்பை அடியிலிருந்து தின்பது போன்றதாகும்,' என்பர். அதாவது, முதலில் மிக நெருக்கமும் இன்பமும் உடையது போன்று காணப்பட்டுக் காலஞ்செல்லச் செல்லக் குறைந்துவிடும் என்பர்.

4. கரும்பைப் பயிரிடுவது எளிது. முற்றிய கரும்பை இரண்டொரு கணுக்கள் தோன்றத் துண்டுகளாக வெட்டி, உழுது நல்ல உரமிட்ட நிலத்தில் ஒரு கணு மேலே தோன்ற நடுதல் வேண்டும். கரும்பிற்கு நீர் மிகவும் தேவை. ஆதலால், நீர் பாய்ச்சுதல் வேண்டும். பூமியில் புதைபட்டுள்ள கணுவிலிருந்து வேர்கள் தோன்றும். கரும்பிற்கு ஆணி வேர் இல்லை; சல்லி வேர்களே உண்டு. பூமிக்கு வெளியிலிருக்கும் கணுவிலிருந்து அரும்பும் முளையும் தோன்றும்.

5. ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு பாரசீகர் கரும்பைப் பயிராக்கக் கற்றுக்கொண்டனர் என்பது தெரி–கிறது. பாரசீகர்களிடமிருந்து அராபியரும், அராபியரிட–மிருந்து ஸ்பெயின் தேசத்தவரும் கரும்பைப் பயிரிடக் கற்றுக்–கொண்டார்கள். உலகில் வெப்பம் மிக்க நாடுகளில் கரும்பு பயிராக்கப்படுகிறது. அஃது ஆறடி உயரம் முதல் பன்னி–ரண்டடி உயரம் வரை வளரும். அதன் பருமன் ஓரங்குலம் முதல் இரண்டங்குலம் வரையிலுமிருக்கும். கரும்பு முற்றுவ–தற்கு எட்டு மாதங்கள் ஆகும்.

6. கரும்பில் பல வகைகள் உண்டு. சிலவற்றில் சுவை குறைந்தும், சிலவற்றில் சுவை மிகுந்தும் இருக்கும். கரும்பின் மேற்பட்டையைச் சீவிவிட்டுத் துண்டுகளாக்கித் தின்னலாம். அவ்வாறு தின்பவர் பல் வெண்மையாய்த் துலங்கும்.

7. கரும்பைத் துண்டம் துண்டமாக வெட்டிக் கரும்–பாலையிலிட்டுச் சாற்றைப் பிழிவர். கருப்பஞ்சாறு கலங்க–லாய் இருக்கும். அதனைக் கொப்பரையிலிட்டுக் காய்ச்சு–வார்கள். கருப்பஞ்சாற்றிலுள்ள அசுத்தங்களைப் போக்குவ–தற்குச் சாறு பொங்கும் பொழுது சுண்ணும்பு நீரைச் சேர்ப்பார்கள். அழுக்கு மேலே திரண்டு வரும். அதனை எடுத்தெறிவார்கள். கருப்பஞ்சாறு காய்ச்சக் காய்ச்சக் குழம்பு போல ஆகும். அப்பொழுது அதனைத் தொட்டிகளில் ஊற்றி ஆற விடுவார்கள். பின்னர், அது முற்றிலும் ஆறிக் கட்டியாகுமுன் உடைப்பார்கள். அதுவே சர்க்கரை எனப்–படுவது. இவ்வாறு எடுக்கப்படும் சர்க்கரை பழுப்பு நிற–முடையதாதலால், **பழுப்புச் சர்க்கரை** எனப்படும். இச்சர்க்–கரையை நீரில் கரைத்துச் சில பொருள்களைச் சேர்த்து, எலும்பைச் சுட்ட கரியில் ஊற்றி வடிகட்டி, மீண்டும் கொப்–பரையில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். அது நீர் வற்றிப் பத–மானதும் வெள்ளைச் சர்க்கரையாகும். பழுப்புச் சர்க்கரையே உடம்புக்கு நல்லது; மருந்துகள் செய்யவும் பயன்படுகிறது. கருப்பஞ்சாற்றைப் பாகு பதத்தில் காய்ச்சி எடுத்து, அச்சுக்–களில் ஊற்றி நன்கு ஆறவிட்டுச் செய்யப்படுவது **வெல்லம்** எனப்படும்.

8. **கியூபாத்** தீவில் கரும்புப் பயிர் அதிகம்; நம் நாட்டிலும் அதிகமாகிக்கொண்டு வருகிறது. **நெல்லிக்குப்பம், ஹோஸ்பேட்டை, மேற்பட்டி** முதலான இடங்களில் கரும்பாலைகள் அமைத்துச் சர்க்கரை காய்ச்சுகிருர்கள். கரும்புப் பயிரும் தொழிற்சாலைகளும் அதிகமாக நம் நாட்டில் ஏற்பட்டு வருகின்றன. கரும்புப் பயிரால் ஊதியம் தரும் பெருந்தொழில் விருத்தியாகிறது.

### அரும்பதம் : பொருள் காண்க :

| | | | |
|---|---|---|---|
| வள்ளல் | இனம் | பருமன் | பழுப்பு |
| அந்தரம் | தடிப்பு | சாறு | பாகு பதம் |
| இவண் | சுரசுரப்பு | கலங்கல் | அச்சு |
| கமுகு | நெருக்கம் | கொப்பரை | |

### சிறு விடை வினுக்கள் :

1. நிலத்துக்கு அணி எவை ?

2. கரும்பைப் பற்றித் தமிழ் நூல்களில் அறியப்படுவன யாவை ?

3. கரும்பு எவ்வினத்தைச் சேர்ந்தது ?

4. கரும்பு பெரியார் சிறியார் நட்பிற்கு எவ்வாறு ஒப்பாகும் ?

5. கரும்பைப் பயிரிடுவது எப்படி ?

6. கரும்பைப் பயிரிடும் முறை எவ்வாறு எங்கெங்குப் பரவியது ?

7. சர்க்கரை எப்படிச் செய்யப்படுகின்றது ?

8. 'பழுப்புச் சர்க்கரை' எப்படி உண்டாகிறது ?

### கட்டுரைப் பயிற்சி :

1. 'கரும்பின் உபயோகம்' என்பதை விளக்கிக் கட்டுரை எழுதுக.

2. சர்க்கரையைக்கொண்டு தொழில் செய்தல் எப்படி என்பதை விளங்குக.

3. கிராமங்களில் உள்ளவர்கள் கரும்பைப் போல வேறு எவற்றைக்கொண்டும் கைத்தொழிலைப் பெருக்கலாம்? விளக்குக.

## பயிற்சி—1

1. அணி, வள்ளல், அந்தரம், விழா, சாறு, இனம்—இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

2. பிரித்தெழுதுக :—

தமிழகம் = தமிழ் + அகம்
நிலத்துக்கணி =
போன்றதாகும் =

## பயிற்சி—2

1. எதிர்ப்பதம் எழுதுக :—

சுரசுரப்பு × வழுவழுப்பு
எளிது ×
இனிக்கும் ×
மேலோர் ×

2. சேர்த்தெழுதுக :—

சாறு + ஐ = சாற்றை
ஆறு + ஐ =
நீறு + ஐ =
வீடு + ஐ =
நாடு + ஐ =

3. கரும்பைப் போல எல்லாப் பாகமும் பயன்படுவன எவை? விளக்குக.

## பயிற்சி—3

1. சர்க்கரை நீரில் கரையும். இது போல நீரில் கரையும் வேறு பொருள் எது?

2. ஆறு சுவைகள் எவை? நான்கு சுவைகளுக்குத் தக்க பொருள்களைக் கூறுக.

3. சர்க்கரை உடல் வளர்ச்சிக்கு அவசியம்.—விளக்குக.

# 3. பூண்டி அரங்கநாத முதலியார்

1. தமிழ் நாட்டில் சிறந்த அறிஞராய் விளங்கியவர் **பூண்டி அரங்கநாத முதலியார்**. அவர் தொண்டை நாட்டிலுள்ள **பூண்டி** என்னும் ஊரிற்பிறந்தவர். அவர் தந்தையார் **சுப்பராய முதலியார்**. அவர் அரசாங்க உத்தியோகத்திலிருந்தார். அவர் தமிழ் நூல்களைக் கற்றிருந்ததோடு தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்து வந்தார். அவருக்கு அரும்புதல்வராய் 1844-ஆம் ஆண்டு அரங்கநாத முதலியார் பிறந்தார்.

2. அரங்கநாதர் இளமைப் பருவத்திலேயே கூரிய அறிவுடையவராய் விளங்கினர்; பள்ளிக்கு ஏகும் பருவம் வந்ததும், பள்ளிக்குச் சென்று ஒழுங்காகக் கற்று வந்தார். அதனுல், வகுப்பிலுள்ள மாணவர்களில் அவரே முதல்வராய் விளங்கினர். அவரிடம் நிறைந்த ஞாபக சத்தி இருந்தது. ஒரு முறை கற்றதை அவர் மறக்கவே மாட்டார். அவர் உயர்தரக் கலாசாலைப் படிப்பைச் சென்னைப் **பச்சையப்பர் உயர்தரக் கலாசாலை**யிற்படித்து முடித்தார்; பின்னர்ச் **சென்னை அரசாங்கக் கல்லூரி**யிற்சேர்ந்து படித்து வந்தார். அவர் ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வோராண்டிலும் பரிசு பெருதிருந்ததே இல்லை. ஒவ்வோர் ஆண்டுப் பரீட்சையிலும் அரங்கநாதரே முதல்வராய்த் தேறுபவர். அவர் திறமையை ஆசிரியர் யாவரும் வியந்து போற்றினர். தமிழ் மொழியினிடத்து ஆர்வங்கொண்ட அரங்கநாதர், அதனையும் செம்மையாகக் கற்ருர்; தமிழ்ப் புலவர்களோடு நெருங்கிப் பழகினர்; தமிழ்ப் புலவர்கள் செய்யும் சொற்பொழிவுகளை விரும்பிக் கேட்டார்.

3. அரங்கநாதர் **பி**. ஏ. பரீட்சையில் தேறியதும் சென்னை அரசாங்கக் கல்லூரியில் ஆசிரியர் பதவியில் அமர்த்தப்பட்டார். பின்பு அவர் கும்பகோணக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுச் சென்ருர். அங்கிருக்கும் பொழுது அவர் **எம்**. ஏ. பரீட்சையும் எழுதித் தேர்ச்சி பெற்ருர். கும்பகோணக் கல்லூரியில் அக்காலத்தில் **வித்துவான் தியாகராச செட்டியார்** தமிழாசிரியராய் இருந்தார். அவருடன் அரங்கநாதர் நெருங்கிப் பழகினர்.

மீண்டும் அரங்கநாதர் சென்னைக் கல்லூரிக்கு வந்தார் ; அப்பொழுது அங்குத் தமிழாசிரியராயிருந்த **தொழுவூர் வேலாயுத முதலியா**ரிடமும் பல நூல்களைப் பாடங்கேட்டார்.

4. அக்காலத்தில் அரசாங்கத்தார் '**இம்பீரியல் கெஸட்டீர்**' என்னும் நூல் தொகுதியை வெளியிடுவதற்கு **ஸர் வில்லியம் வில்ஸன் ஹண்டர்** என்பவரை நியமித்தனர். ஹண்டர் இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றித் திரிந்து, பல அரிய செய்திகளைச் சேகரித்தார். அவர் தமிழ் நாட்டிற்கு வந்த பொழுது அவருக்கு உதவி செய்யும்பொருட்டு அரசாங்கத்தார் அரங்கநாதரை நியமித்தனர். அரங்கநாதரது கல்விச் சிறப்பையும் நுண்மதியையும் ஹண்டர் நன்கு அறிந்துகொண்டார் ; அரங்கநாதரால் அரிய செய்திகள் பலவற்றை அறிந்தார். அவர் அரங்கநாதரைப் பற்றிக் கூறுகையில், "அரங்கநாதர் ஓர் ஆச்சரியமான மனிதர் !" என்று வாயாரக் கூறினர்.

5. அரங்கநாதர் ஆங்கிலம், கணிதம், தத்துவம், சரித்திரம் முதலான எல்லாத் துறைகளிலும் வல்லவர். அவர் எந்தப் பாடத்தையும் கல்லூரி மாணவர்களுக்கு மிக எளிதிற் கற்பிப்பார். அவர் சொற்பொழிவாற்றலிலும் வல்லவர். 1890-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகப் பட்டம் அளிப்புத் திருவிழாவில் அவர் பேசிய பேச்சு அனைவராலும் போற்றப்பட்டது. '**புதிய இந்தியா**' என்ற நூலின் ஆசிரியரான **காட்டன்** என்பவர் அரங்கநாதர் சொற்பொழிவின் நடையழகையும் சொற்சுவையையும் பொருளாழத்தையும் கண்டு வியந்தார். சென்னை அரசாங்கக் கல்லூரியில் **டங்கன்** என்பவர் தத்துவப் போதகாசிரியராய் இருந்தார். அவர் அரங்கநாதரைப் பற்றிக் கூறும் பொழுது, 'கீழ் நாடு மேல் நாடு என்னும் இரு நாடுகளின் கலை வடிவாய் விளங்குபவர்,' என்று கூறியுள்ளார்.

6. அரங்கநாத முதலியார் காலத்தில் **ஸர் தி. முத்துசாமி அய்யர்** என்பவர் சென்னை உயர்தர நீதிமன்றத்து நீதிபதியாய்

இருந்தார். அரங்கநாதரின் அறிவின் திறத்தைக் கண்டு மகிழ்ந்த முத்துசாமி ஐயர், அவரோடு நெருங்கிப் பழகினர். **சேலம் இராமசாமி முதலியாருக்கும்** அரங்கநாத முதலியாருக்கும் நெருங்கிய நட்பு உண்டு. சேலம் இராமசாமி முதலியார், கும்பகோணக் கல்லூரியில் தமிழாசிரியராயிருந்த **டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்** அவர்களிடம் **சீவக சிந்தாமணி** என்னும் ஓலைச்சுவடியைக் கொடுத்து, அச்சிற்பதிப்பிக்க வேண்டினர்; அதற்கு ஐயரவர்களுக்குப் பல வகையில் உதவியும் புரிந்தார்; அரங்கநாத முதலியாரையும் ஐயரவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அரங்கநாதர் அப்புத்தகப் பதிப்பிற்கு ஐம்பது ரூபாய் கொடுப்பதாக வாக்களித்தார். அப்புத்தகம் முடிந்ததும் ஐயரவர்கள் அரங்கநாத முதலியாருக்குப் புத்தகத்தை அனுப்பினர். அரங்கநாதர் தாம் கொடுப்பதாகக் கூறியது ஐம்பது ரூபாய் ஆயினும், நூறு ரூபாய் கொடுத்தார். அரங்கநாதரின் தமிழ்ப்பற்றும் புலவர்களை ஆதரித்தலாகிய குணமும் இதனால் விளங்குகின்றன அல்லவா ?

7. அரங்கநாதர் பாடம் போதிப்பதில் மிக்க திறமை உடையவர் ; அறிவுடைய மாணவர்களிடத்தில் அளவிலா அன்பு உடையவர் ; அத்தகைய மாணவர்களுக்கு அவர்கள் வேண்டும் உதவிகளைத் தாமே வலியச் சென்று செய்வார். அவ்வாறு அவரால் உதவி பெற்ற மாணவர் பலர்.

8. அரங்கநாதர் தமிழ் நூல்களைச் சிறக்கக் கற்றவர் ; கவிகள் பாடுவதிலும் வல்லவர். தொழுவூர் வேலாயுத முதலியார் அரங்கநாதருக்குத் தமிழ் போதித்தார் அல்லவா ? அவர் **திருவொற்றியூர், காஞ்சீபுரம்** என்னும் இரு தலங்களிலுமுள்ள சிவபெருமான்மீது **'மகிழ் மாக்கலம்பகம்'** என்னும் நூலைப் பாடினர். மகிழ் என்பது மகிழமரம் ; திருவொற்றியூரிலுள்ள தலவிருட்சம். மா என்பது மாமரம் ; காஞ்சீபுரத்திலுள்ள தலவிருட்சம். இவ்விரு தலவிருட்சங்களினடியிலும் இத்தலங்களின் பெருமான்கள் எழுந்தருளியிருக்கின்றார்கள் என்னும் கொள்கை உண்டு. மகிழ் மாக்கலம்பகத்தைப் படித்த அரங்கநாத முதலியாருக்குத் தாமும் ஒரு கலம்பகம் பாட வேண்டும் என்ற அவா உண்டாயிற்று. அதனால்,

அவர் காஞ்சீபுரத்திலுள்ள சிவபெருமான்மீது **'கச்சிக் கலம்பகம்'** என்னும் நூலைப் பாடினர். அந்நூல் அச்சாயிற்று. அதனைச் சென்னைத் தொண்டைமண்டலத் துளுவ வேளாளர் உயர்தரப் பாடசாலையில் அரங்கேற்றினர். ஆறு நாள் அரங்கேற்றம் நடந்தது. டாக்டர் சாமிநாதய்யரும் கச்சிக் கலம்பகத்தில் சில பாடல்களைப் படித்து விரிவுரை கூறிச் சிறப்பாக அரங்கேற்றினர்.

9. அரங்கநாத முதலியார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உறுப்பினராயும், கல்லூரி மாணவர்களைப் பரீட்சிக்கும் அதிகாரியாயும் இருந்து பல அரிய தொண்டுகளைச் செய்தார் ; சென்னை உயர்நீதி மன்றத்தால் '**ஷெரீப்பு**'ப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஓயாது வேலை செய்வார் ; படிப்பார். அவரைக் **கல்விக் கடல்** என்றே கூறலாம். அவர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர் ; யாவரிடத்திலும் அன்போடு இனிமையாகப் பேசுபவர் ; பேருபகாரி. ஒழுக்கம், உண்மை, உழைப்பு என்பவற்றை அவர் தமக்கு அணிகலனாகக் கொண்டவர். அவர் ஓயா உழைப்பால் உடல் நிலையில் தளர்வுற்றார். அவர் உடலின் வலிமை குன்றினாலும், அறிவின் வலிமை குன்றவில்லை. அவர் 1893-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். இறக்கும் வரையிலும் ஞாபக சத்தியிற் குன்றாது, நற்பண்புகள் பொலிய விளங்கியவர் அரங்கநாத முதலியாரேயாவர்.

### அரும்பதம் : பொருள் காண்க :

| | | | |
|---|---|---|---|
| *அறிஞர்* | *நியமித்தல்* | *உயர்நீதி மன்றம்* | *விருட்சம்* |
| *ஞாபக சத்தி* | *பல்கலைக்கழகம்* | *பதிப்பித்தல்* | *அரங்கேற்றம்* |
| *சொற்பொழிவு* | *கலை வடிவு* | *கலம்பகம்* | *உறுப்பினர்* |

### சிறு விடை வினாக்கள் :

1. *அரங்கநாதர் எவ்வாண்டில் பிறந்தார்? அவருடைய தந்தையார் யாவர்? அவரிடமிருந்த சிறப்பு இயல்பு யாது?*

2. *அரங்கநாதரின் இளமைப் பருவமும் கல்வியும் பற்றி எழுதுக.*

3. வித்துவான் தியாகராச செட்டியார், தொழுவூர் வேலாயுத முதலியார் என்பவர்களைப் பற்றி நீ அறிவன யாவை ?

4. ஹண்டர் என்பவர் யார் ? அரங்கநாதருக்கு அவர் நட்புக் கிட்டியது எப்படி ?

5. ஹண்டர், காட்டன் என்பவர் அரங்கநாதரைப் பற்றிக் கூறுவன யாவை ?

6. 'அரங்கநாதரும் சாமிநாத ஐயரும்' என்னும் தலைப்-பமைத்து நீ அறிந்தவற்றை எழுதுக.

7. 'மகிழ் மாக்கலம்பகம்' என்பது பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

8. 'கச்சிக் கலம்பகம்' பாடிய சந்தர்ப்பம் யாது ?

9. அரங்கநாதரின் இயல்புகளை விளக்குக.

## கட்டுரைப் பயிற்சி :

1. 'ஒருவன் உயர்ந்தோனாய் விளங்கச் செய்ய வேண்டி-யவை' என்னும் தலைப்பில் நீ அறிந்தவற்றை எழுதுக.

2. 'டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் தமிழுக்குச் செய்த தொண்டு' என்பதைப் பற்றிப் படித்தோ, கேட்டறிந்தோ ஒரு கட்டுரை எழுதுக.

## பயிற்சி—I

1. 'அவர் தமிழ் நூல் கற்றிருந்ததோடு தமிழ்ப் புலவர்-களையும் ஆதரித்தார்.'—இதனை இரு சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

2. 'தமிழ் மொழியினிடத்து ஆர்வங்கொண்ட அரங்கநாதர் அதனையும் செம்மையாகக் கற்றார் ; தமிழ்ப் புலவர்களோடு நெருங்கிப் பழகினர் ; தமிழ்ப் புலவர்கள் செய்யும் பிரசங்கங்களை விரும்பிக் கேட்டார்.'—இதனை ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுதுக.

## பயிற்சி—2

1. அரிய செய்தி, ஞாபக சத்தி, கல்விச் சிறப்பு, நுண்மதி, பொருளாழம், சொற்சுவை, அறிவின் திறம், அறிமுகப்படுத்தல்— இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

2. கீழ் வருவன முறை பிறழ்ந்துள்ளன ; சரிப்படுத்துக :—

| | |
|---|---|
| அரங்கநாதர்— | மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் கல்வி கற்றார். |
| டாக்டர் சாமிநாதய்யர்— | இராமலிங்க சுவாமிகளிடம் கல்வி கற்றார். |
| தொழுவூர் வேலாயுத முதலியார்— | மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் கல்வி கற்றார். |
| தியாகராச செட்டியார்— | தொழுவூர் வேலாயுத முதலியாரிடம் கல்வி கற்றார். |

3. 'சொற்பொழிவு'—இதனை வேறு எவ்வெச்சொற்களாற்கூறலாம்?

## பயிற்சி—3

1. 'பட்டமளிப்புத் திருவிழா'வைப் பற்றி ஆசிரியர்களைக் கேட்டறிந்து எழுதுக.

2. உன் பள்ளியில் மாணவர்கட்குப் பரிசளிப்பு விழா உண்டல்லவா ? அதனைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் அச்சிற்பதிப்பித்த தமிழ் நூல்களுள் ஐந்தைப் பற்றி ஆசிரியரைக் கேட்டறிந்து எழுதுக.

## பயிற்சி—4

1. ஸர் தி. முத்துசாமி ஐயரைப் பற்றி நூலகத்திற்படித்து, அவற்றைப் பற்றி நீ அறிந்ததை எழுதுக.

2. திருவொற்றியூர், காஞ்சீபுரம் என்பவற்றில் ஒன்றைப் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

3. நீ அறிவுடைய மேலோனாய் விளங்க யாது செய்வாய் என்பது பற்றி எழுதுக.

# 4. பணம்

1. '**பணம் பந்தியிலே; குலம் குப்பையிலே,**' என்பது உலகப் பழமொழி. '**ஈட்டி எட்டின மட்டும் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும்,**' என்னும் பழமொழியையும் நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா ? '**பணமில்லாதவன் பிணம்,**' என்பதும் நாம் அறிந்ததே. இப்பழமொழிகள் எல்லாம் பணத்தின் சிறப்பையும் ஆற்றலையும் விளக்க எழுந்தன. **திருவள்ளுவர்,** 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை,' என்று கூறினர். இவ்வுலக இன்பம் யாவும் பொருள் இல்லாதவனுக்கு இல்லையாகும் என்பது அதன் கருத்து. மக்கள் அடையத் தகும் உறுதிப் பொருள்கள் நான்கு. அவை **அறம், பொருள், இன்பம், வீடு** என்பன. வீடு என்பது, மோட்சம். இவ்வுலகத் தொடர்புடையன அறம், பொருள், இன்பம் என்பன. பொருள் இருந்தால், அறத்தைச் செய்யலாம்; இன்பத்தை அடையலாம். ஆகவே, இரண்டினையும் அடைதற்குரிய பொருளை அவற்றிற்கு இடையில் அமைத்தார்.

2. பணம் என்பது பண்டங்களைக் கைம்மாற்றுச் செய்வதற்கு உரியதாகவும், யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்க நிலையான மதிப்புடையதாகவுமுள்ள நாணயம் ஆகும். இப்பணம் பொன், வெள்ளி, செம்பு, நிக்கல் என்னும் உலோகங்களால் செய்யப்படும். அரசாங்கத்தாரால் வெளியிடப்படும் நாணயச் சீட்டுக்களும் பணமேயாகும். நாணயச் சீட்டுக்கள் பிற்காலத்தில் வந்தவை. உலோக நாணயங்களும் நாணயச் சீட்டும் (நோட்டு) ஒருவரிடமிருந்து மற்றொருவர் எளிதாகக் கைம்மாற்றிக்கொள்ளக் கூடியவை. இவை வாணிபத்தைப் பெருக்குவதற்குப் பேருபகாரமாய் உள்ளவை.

3. முன் காலத்தில் '**பண்டமாற்று**' என்னும் வழக்கம் இருந்தது. ஒருவர் ஒரு பண்டத்தைக் கொடுத்துத் தமக்கு வேண்டுவதான பிறிதொரு பண்டத்தை வாங்குவது பண்டமாற்று எனப்படும். முன் காலத்தில் இப்பண்டமாற்று உலகில் எங்கும் வழங்கி வந்ததென்பதை அறிகிறோம். இன்றும்

அரிசி கொடுத்துக் கறிவேப்பிலை வாங்குவதும், துணி கொடுத்துப் பித்தளை அலுமினியப் பாத்திரங்கள் வாங்குவதும், பித்தளை செம்பு ஓட்டைப் பாத்திரங்களைக் கொடுத்துப் பேரீச்சம்பழம் வாங்குவதும் இப்பண்டமாற்று முறையேயாகும்.



4. பண்டமாற்று முறையிலுள்ள துன்பங்கள் பல. ஒருவன் வைத்திருக்கும் பண்டத்தை மற்றவன் பெற்றுக்கொண்டு, அவனுக்கு வேண்டிய பண்டத்தைக் கொடுக்க இசைய வேண்டும். ஒருவனுக்கு மற்றொருவனிடம் இருக்கும் பண்டம் தேவையாய் இருக்கலாம்; ஆனால், மற்றவனுக்கு அவனுடைய பண்டம் தேவை இல்லாமலிருக்கலாம். பண்டங்களின் விலை மதிப்பின் ஏற்றத் தாழ்வினால் பண்டமாற்றுக்குத் தடை நேரலாம். ஒருவன் விரும்பும் பொருளைப் பெறத் தன்னிடமுள்ள பண்டத்தை எடுத்துக்கொண்டு பிற ஊர்களுக்கும் செல்ல வேண்டி வரும். தான் விரும்பும் பொருள் தன் ஊரில் கிடையாமை அதற்குக் காரணமாகலாம். பண்டத்தை எடுத்துச் செல்வதில் துன்பம் உண்டல்லவா ?

5. மக்கள் மிகப் பழைமையான காலத்தில் வேட்டையாடிப் பெற்ற புலி நகம், யானைத் தந்தம், புலித்தோல், மான்

தோல் முதலியவற்றைப் பணமாக உபயோகித்துள்ளார்கள். ஆடு மாடுகளைப் பணமாகக் கருதியிருந்த காலமுமுண்டு. சிவப்பிந்தியர் மணிகளைப் பணமாக உபயோகித்தனர். ஆசியாவில் சோழி (பலகறை) பணமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பல பொருள்கள் பற்பல இடங்களில் பணமாக வழங்கி வந்த காலமுமுண்டு. தமிழ் மொழியில் '**மாடு**' என்னும் சொல் '**செல்வம்**' என்னும் பொருளில் வழங்குவதை,

> " கேடில் விழுச்செல்வம் கல்வி ; ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை '

என்னும் குறளால் அறியலாம்.

6. ஒரு நாட்டவர் பிற நாட்டவரோடு வாணிபம் செய்யும் பொழுது ஒருவர் வைத்துள்ள பொருளை மற்றவர் விரும்பாமலும் இருக்கலாம் ; பணமாக மதிக்காமலுமிருக்கலாம். யாரும் எப்பொருளையும் எங்கும் பெறவும் அப்பொருளுக்கேற்ப மதிப்புடையதொன்றை யாவரும் சம்மதித்து ஏற்றுக்கொள்ளவும் அமைவது, இலகுவாகுமன்றே ? அத்தகைய பொருள்கள் உலோக நாணயங்களே. உலோக நாணயங்களை எடுத்துச் செல்வதும் எளிது. அதனினும் எளிது, நாணயச்சீட்டை எடுத்துச் செல்வது. முதல் முதல் இரும்பாலும் செம்பாலும் நாணயங்கள் செய்யப்பட்டன. பின்னரே பொன், வெள்ளி நாணயங்கள் தோன்றின. நாணயங்களுக்கு நிலைத்த மதிப்பு உண்டு. அதனால், வியாபாரத்திற்கு நாணயங்கள் அவசியமாயின.

7. நிலைத்திருத்தலும், ஒளி குறையாதிருத்தலும், ஒலியினால் அறியத் தகுந்ததாயிருத்தலும், சிறு பகுதியும் விலை மதிப்புடையதாயிருத்தலும் நாணயத்தின் தன்மைகளாகும். இத்தன்மைகளைப் பெற்ற உலோகங்கள் பொன்னும் வெள்ளியும் ஆகும். அவை இரண்டும் எவ்வளவு சிறு பகுதிகளாக்கினும், விலை மதிப்புடையவை. உலகில் எந்நாட்டிலும் பொன்னும் வெள்ளியும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அதனால், பொன்னும் வெள்ளியுமே நாணயங்களுக்குச் சிறந்தவை. மேனாடுகளில்

இன்றும் பொன் நாணயங்கள் உபயோகிக்கப்படுகின்றன. நம் தமிழ் நாட்டில் பண்டைக்காலத்திலும் பொன் நாணயங்கள் வழங்கி வந்தன என்பதை அறிகிறோம். **'துளைப் பொன்'** என்பது பண்டைக்காலத்தில் அரசாங்கத்தாரால் அளவிட்டு முத்திரை செய்யப்பட்டு வழக்கிலிருந்த நாணயமாகும். **'காசு'** என்னும் சொல் தமிழில் பொன்னைக் குறிப்பதை இந்நாளிலும் கேட்கிறோமன்றோ? முன் நாளில் வாணிபத்திற்குச் சிறு சிறு பொன் கட்டிகளையும் வெள்ளிக் கட்டிகளையும் பயன்படுத்தினர்; அவைகளை எடையிட்டனர்; உரை கல்லில் உரைத்துப் பெறுமானம், சுத்தம் என்பவற்றை அறிந்தனர். பின்னர் அவற்றில் அரசாங்க முத்திரைகள் இடப்பட்டன. அரசாங்கத்தாரே நாணயங்களைச் செய்து அளிப்பாராயினர். நாளடைவில் அந்நாணயங்கள் இன்று வழங்கும் நாணயங்களின் நிலையை எய்தின.

8. இன்று வழங்கும் நாணயங்களைக் **குறிப்பு நாணயங்கள்** என்று கூறுவர். ஏன்? அவற்றின்மீது குறிப்பிட்டுள்ள தொகையின் மதிப்பையே அவை பெறுகின்றன. நிக்கல் செம்பு நாணயங்கள் பெறுமானத்தால் மதிப்புடையனவல்ல; ஆயினும், அரசாங்கத்தார் முத்திரையைப் பெற்றிருப்பதால் அம்மதிப்பை அடைகின்றன.

9. பொன் நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் மிகுந்த அளவில் தூக்கிச் செல்வது கடினம். தூரதேசத்திற்குச் செல்பவரும் அவற்றைக் கொண்டு செல்வது கடினம். கள்வர் பயமும் அதிகம். அதனால், அரசாங்கத்தார் நாணயச் சீட்டுக்களை வழங்கியுள்ளனர். நாணயச் சீட்டுக்கள் காகிதத்தாலானவை. ஆதலால், பெருந்தொகைகளையும் எடுத்துச் செல்லுதல் மிக எளிது. நாணயச் சீட்டுக்களில் 'குறிப்பிட்டுள்ள தொகை கொடுக்கப்படும்' என்னும் அரசாங்கத்தாரின் வாக்குறுதி அச்சிடப்பட்டிருக்கிறது. அதனால், அந்நாணயச் சீட்டுக்களை எவரிடம் கொடுப்பினும், அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அளிப்பர்.

10. நாணயச் சீட்டுக்கள் இருப்பதால் வெள்ளியும் பொன்னும் மிச்சப்படுகின்றன. அவை பிற தொழில்களுக்குப்

பயன்படுகின்றன. நாணயச் சீட்டுக்களில் குறிப்பு] எண்கள் இருத்தலால், அவற்றைக் குறித்து வைத்துக்கொள்ளலாம். அவை திருட்டுப் போனாலும் எளிதில் கண்டு பிடித்துவிடலாம் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய், நூறு ரூபாய் என்னும் தொகை மதிப்பிற்கு நாணயச் சீட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றும் வெவ்வேறு அமைப்பில் அமைந்திருத்தலைக் காணலாம்.

11. உலோக நாணயங்களும் காகித நாணயங்களும் வியாபாரத்தைப் பெருக்குவதற்குப் பெருந்துணை புரிகின்றன. நம் நாட்டில் பொன்னையும் வெள்ளியையும் ஆபரணங்களாகச் செய்து அணிந்துகொள்கின்றனர். ஆபரணங்கள் மக்களுக்கு ஊதியம் தருவதில்லை; நாளுக்கு நாள் தேய்வினால், எடை-யிலும் குறையும். நகைகளில் இடப்படும் பொன்னையும் வெள்ளியையும் வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் பயன்-படுத்தினால், மிக்க ஊதியம் பெறலாமன்றோ ? நகைகளுக்குச் செலவு செய்யும் பணத்தைப் பாங்கிகளில் போட்டு வைத்தால், வட்டி கிடைக்கும்; அதனால் பணமும் பெருகும்.

### அரும்பதம் : பொருள் காண்க :

| | | |
|---|---|---|
| *பந்தி* | *கைம்மாற்று* | *உரை கல்* |
| *பாதாளம்* | *நாணயங்கள்* | *வாக்குறுதி* |
| *ஆற்றல்* | *இசைதல்* | *மிச்சப்படுத்தல்* |
| *தொடர்பு* | *ஏற்றத்தாழ்வு* | *தொகை மதிப்பு* |
| *பண்டம்* | *இலகு* | |

### சிறு விடை வினாக்கள் :

1. *பணத்தின் ஆற்றலை விளக்கும் பழமொழிகள் யாவை ?*

2. *திருவள்ளுவர் பணத்தைப் பற்றி என்ன கூறுகிறார் ?*

3. *அறம் பொருள் இன்பம் என்னும் தொடரில் பொருளை இடையில் வைத்தது ஏன் ?*

4. எவை நாணயங்கள் ?

5. 'பண்டமாற்று' என்பது என்ன ? இந்நாளிலும் பண்டமாற்று உள்ளது என்பதை எப்படி அறியலாம் ?

6. பண்டமாற்றால் ஏற்படும் துன்பம் யாது ?

7. பண்டைக் காலத்தில் நாணயங்களாய் வழங்கியவை எவை ?

8. நாணயங்களினால் உண்டான நன்மை என்ன ?

9. நாணயத்தின் தன்மைகள் யாவை ?

10. துளைப் பொன், காசு, மாடு, குறிப்பு நாணயங்கள், நாணயச் சீட்டு என்பவை பற்றி நீ அறிந்தவை யாவை ?

## கட்டுரைப் பயிற்சி :

1. 'பண்டைக்கால வியாபாரமும், இக்கால வியாபாரமும்' என்பது பற்றி நீ அறிந்ததை எழுதுக.

2. 'நாணயங்கள்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. 'பணத்தைப் பெருக்கும் முறை' என்பது பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

## பயிற்சி—I

1. ஆற்றல், தொடர்பு, வாக்குறுதி, தொலைவு, ஏற்றத்தாழ்வு—இவைகளை அமைத்துத் தனித்தனி வாக்கியம் எழுதுக.

2. 'பணம்' என்பது பண்டங்களைக் கைம்மாற்றுச் செய்வதற்கு உரியதாகவும், யாவரும் ஒப்புக்கொள்ளும் நிலையான மதிப்புடையதாகவுமுள்ள நாணயமாகும்.—இதனைச் சிறு சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

## பயிற்சி—2

1. ‘பண்டமாற்று முறையிலுள்ள துன்பங்கள் பல.’— இவ்வாக்கியத்தை எத்தனை முறையாக மாற்றி எழுதலாம்?

2. முதல் முதல், கழியக் கழிய, கஷ்ட நஷ்டம், இன்ப துன்பம்—இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

3. ‘பேருபகாரம்’—சொந்த வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

# 5. மாறவர்மன் அரிகேசரி

1. தமிழகத்தை **முடியுடை மூவேந்தர்** ஆண்டு வந்தனர். அவர் **சேர சோழ பாண்டியர்** எனப்படுவர். அவர்கள் ஆண்ட நாடுகள் **சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு** என்பனவாம். பாண்டியர் குடி மிகப் பழைமையான குடியாகும். பாண்டியர்கள் தமிழ் மொழியை வளர்த்து வந்தார்கள். பாண்டி நாட்டிற்குத் தலைநகர் **மதுரை.**

2. பாண்டி நாட்டினை ஆண்ட பாண்டியர் பலருள் அரிகேசரி என்பவனும் ஒருவன். அவன் கி. பி. 640ல் பட்டத்திற்கு வந்தான். அவன் **செழியன் சேந்தன்** என்பவனுக்கு மகன். அவன் **மாறவர்மன்** என்னும் பட்டப் பெயரைப் பெற்றான். அவனுக்குச் **சுந்தர பாண்டியன், கூன் பாண்டியன்** என்னும் வேறு பெயர்களுமுண்டு. அம்மன்னனைப் **பராங்குசன்** என்றும், **உசிதன்** என்றும், **சத்துரு துரந்தரன்** என்றும், **அரிகேசரி அசமசமன்** என்றும் நூல்கள் போற்றிக் கூறும். **நெடுமாறன்** என்னும் பெயரும் அம்மன்னனுக்கு உண்டு.

3. அம்மன்னன் அரசனுனதும் படை வலிமையால் பிற நாடுகளை வென்றான்; சேர நாட்டு மன்னனைப் போரில் வென்றான். சோழநாட்டில் நடத்திய போரினால்சோழநாட்டில் ஒரு பகுதி அவனுடையதாயிற்று. மற்றப் பகுதியைப் பல்லவர் கைப்பற்றினர். அக்காலத்தில் சோழமன்னர் வலிமை குன்றியிருந்தனர். நெடுமாறன் **பாழி, நெல் வேலி, செந்நிலம், விழிஞம்** முதலான இடங்களில் கடும்போர் புரிந்து, பகைவர்களை வென்றான். அவனுக்கு அடங்காத மன்னரே இலர் என்னலாம். அவன் இமயம் வரையிற்சென்று வட நாட்டு மன்னர்களையும் வென்றான் என்றும், இமயத்தில் தன் மீனக் கொடியைப் பொறித்து வந்தான் என்றும் கூறுவர். அவன் நெடியவனாய், அழகு வாய்ந்தவனாய், பெருவீரனாய்ச் சிறந்து புகழோடு விளங்கியவன் ஆவன்.

4. அவன் காலத்தில் குடிமக்கள் இன்புற்றிருந்தார்கள். அரிகேசரி சோழனோடு தொடுத்த போரில் சோழன் தோற்-

றன். சோழன் பாண்டியனுடைய வீரதீரத்தை வியந்து, தன் மகள் **மாதேவி** என்பாளை அவனுக்கு மணம் செய்து கொடுத்தான். மாதேவி, உருவிலும் திருவிலும் ஒப்பற்றவள்; உயர்குணங்கள் பல நிறைந்தவள். அவள் பாண்டியன் மனைவியான பின் **பாண்டி மாதேவி** என வழங்கப்பட்டாள். அவ்வம்மை, சிவபத்தி மிகவும் உடையவள். அரிகேசரி அவளிடம் கொண்டிருந்த அன்பிற்கோர் எல்லையில்லை.

5. அரிகேசரியின் அமைச்சராய் விளங்கியவர் **குலச்சிறையார்**. அவர் கல்வி கேள்விகளில் மிகச் சிறந்தவர்; நுண்மதி வாய்ந்தவர்; நற்குண நற்செயல்கள் வாய்ந்தவர்; சிவபத்தர். அவர் அரசனுக்கு அவ்வப்போது ஆன்ற மொழிகளைக் கூறி, அவனை நல்வழிப்படுத்தி வந்தார்.

6. எல்லா வகையாலும் சிறந்து விளங்கிய பாண்டியனுக்கு வினைப் பயனுய்க் கொடிய நோய் ஒன்று கண்டது. அந்நோயினால் பாண்டியன் மிகவும் துன்பமுற்றான்; அவனது நெடிய உடலும் வளைந்தது. அவன் கூனன் ஆயினன். அக்காரணத்தால், அவனைக் **கூன் பாண்டியன்** என்று பலரும் வழங்குவாராயினர். அந்நோயால் வருந்திய பாண்டியன், பற்பல வகைகளில் நோயை நீக்கிக்கொள்ள முயன்றான். அவன் உண்ணாத மருந்து இல்லை; செய்யாத மந்திர செபங்கள் இல்லை. அவன் அறச் செயல்கள் பலவும் செய்தான்.

7. அக்காலத்தில் சமண புத்த மதங்கள் தமிழகத்தில் வலிமையுற்றிருந்தன. காஞ்சீபுரத்திலிருந்த பல்லவ மன்னனான **மகேந்திர வர்மன்** சமண மதத்தைத் தழுவிச் சமணர்களைப் பெரிதும் ஆதரித்தான். **ஆனை மலை** முதலான இடங்களில் வசித்த சமணர், பாண்டி நாட்டிற்புகுந்தனர். அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுச் சுவை மிக்க காப்பியங்களை இயற்றினர்கள்; அந்நூல்களில் தங்கள் மதக் கொள்கைகளை அழகுற அமைத்தார்கள். தமிழ் மக்கள் காப்பியச் சுவை கருதி அந்நூல்களைப் படித்தார்கள். சமணர்கள் தங்கள் மதி வன்மையால் அரசர்கள் உள்ளத்தைக் கவர்ந்து, அரசர்களையும் சமணர்களாக்கினர்கள். அரசர்கள் சமணர்களானதும் குடி மக்களும் சமண மதத்தைத் தழுவி-

னர்கள். ‘அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள்,’ என்பது உண்மை உரையல்லவா ?

8. தமிழகத்தில் சமணர்கள் ஆதிக்கம் அதிகரித்தது; சமண மதம் பரவியது; சைவ மதம் குன்றியது. அதனால், சைவ மதத்தைப் புத்துயிர் பெறுமாறு செய்யச் சான்றோர் தோன்றினர். **திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர்** என்னும் இருவரும் விளங்கிய காலம் அதுவே. அவர்கள் தமிழ் மக்களின் நிலையை அறிந்து, தமிழில் இசைப் பாட்டுக்களைப் பாடி, பத்தி மார்க்கத்தை நாட்டில் பரப்பலானார்கள். திருநாவுக்கரசர் **மகேந்திர வர்ம பல்லவ**னைச் சைவனாக்கினர். அதனால், காஞ்சீபுரத்தில் சமணர்களின் வலிமை குறைந்தது.

9. திருஞான சம்பந்தர் சோழ நாட்டில் சீர்காழிப் பதியில் தோன்றியவர்; மூன்றும் வயதில் இறைவியின் அருளால் ஞானப் பால் உண்டவர். பாண்டி நாட்டில் சமணர் வலிமை பெற்று வருவதும், நெடுமாறன் சமணன் ஆனதும் மங்கையர்க்கரசியான பாண்டிமாதேவியார்க்கும் குலச்சிறையார்க்கும் அளவிலாத் துன்பத்தைத் தந்தன. அவர்கள் மீண்டும் சைவத்தைச் செழித்தோங்கச் செய்யும் வழியை நாடினர்கள். அவர்கள் திருஞான சம்பந்தரைப் பற்றியும் திருநாவுக்கரசரைப் பற்றியும் கேள்வியுற்றனர்கள். மங்கையர்க்கரசியார் திருஞான சம்பந்தரைப் பாண்டி நாட்டிற்கு வந்து சமணத்தை அகற்றிச் சைவத்தை உயிர்ப்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். திருஞான சம்பந்தரும் அவ்வம்மையார் வேண்டுகோளுக்கு இணங்கிப் பாண்டி நாட்டு மதுரைக்கு வந்தார்.

10. சமணர்கள் திருஞான சம்பந்தருக்குத் தீங்கிழைக்க முயன்றனர்கள். கூன் பாண்டியன் வெப்பு நோயால் வருந்தினன். அவன் சமணர்களை அழைத்து நோயை நீக்குமாறு கட்டளையிட்டான். சமணர்கள் மருந்தினாலும், மந்திரத்தினாலும் அந்நோயை நீக்க முயன்றனர்கள். நோய் நீங்கவில்லை. குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் மன்னனை வேண்டிக்கொள்ள, மன்னன் திருஞான சம்பந்தரை அழைத்துப் பிணியைப் போக்குமாறு வேண்டினன். திருஞான சம்பந்தர் மன்னனுக்கு நல்லுபதேசம் செய்து, பதிகம் பாடி, நீறளித்–

தார். இறைவன் அருளால் பாண்டியன் நோய் நீங்கியது. அவன் கூனும் நிமிர்ந்தது. பண்டு போல அவன் நெடுமாறனுய் விளங்கினன்; மீண்டும் சைவனுயினன்.

11. அரிகேசரியின் காலம் மதமாற்றக் காலம் என்னலாம். பாண்டி நாட்டிலும் தொண்டை நாட்டிலும் சமணத்திலிருந்து சைவத்திற்கு மக்கள் மாறினுர்கள். சமணர்களின் ஆதிக்கம் குன்றியது.

12. அரிகேசரி தமிழ்ப் பற்றுடையவன்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவன். அவன்மீது **மாறன் கோவை** என்ற நூலும் பாடப்பட்டுள்ளது. நெடுமாறன் **இரணிய கர்ப்ப**மும் **துலாபார தான**மும் பல முறை செய்தவன்.

13. சைவ சமய குரவர் நால்வருள் ஒருவரான **சுந்தரர்**, '**நின்றசீர் நெடுமாறர்**' எனப் பாண்டியனைச் சிறப்பிக்கின்றுர். நெடுமாறன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் என்பாரின் சிறப்புக்களைச் **சேக்கிழார்** தாம் இயற்றிய **பெரிய புராணம்** என்னும் நூலிலும், **பரஞ்சோதி முனிவர்** தாம் இயற்றிய **திருவிளையாடற்புராணம்** என்னும் நூலிலும் சிறப்பாகக் கூறியுள்ளனர்.

" பங்கயச் செல்வி பாண்டிமா தேவி "

என்று திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சிறப்பிக்கின்றுர்.

14. அரிகேசரி மாற வர்மனை நின்றசீர் நெடுமாறன், கி. பி. 640 முதல் கி. பி. 670 வரை பாண்டி நாட்டைச் சிறப்புற ஆண்டு, இறைவனடியை அடைந்தான். சைவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் நெடுமாறன், குலச்சிறையார், மங்கையர்க்கரசியார் என்பவரும் அடங்குவர்.

**அரும்பதம் : பொருள் காண்க :**

| | | | |
|---|---|---|---|
| *கைப்பற்றல்* | *தழுவல்* | *வேண்டுகோள்* | *சமயம்* |
| *நெடியவன்* | *கொள்கை* | *பதிகம்* | *குரவர்* |
| *உரு* | *காப்பியச் சுவை* | *நீறு* | *நாயன்மார்* |
| *திரு* | *மதி வன்மை* | *மதமாற்றம்* | |
| *ஆன்ற* | *மார்க்கம்* | *இரணியகர்ப்பம்* | |
| *நல்வழிப்படுத்தல்* | *உயிர்ப்பித்தல்* | *துலாபாரம்* | |

## சிறு விடை வினுக்கள் :

1. தமிழக முடியுடை மூவேந்தர் யாவர் ?

2. அரிகேசரியின் தந்தை யார் ? அரிகேசரிக்குரிய வேறு பெயர்கள் யாவை ?

3. அரிகேசரியின் போர்த் திறன் எப்படிப்பட்டது ?

4. பாண்டிமாதேவி, குலச்சிறையார் என்பவர்களைப் பற்றி நீ அறிந்தவை யாவை ?

5. 'கூன் பாண்டியன்' என்னும் பெயர் வழங்கக் காரணம் என்ன ?

6. அரிகேசரியின் காலத்துப் பல்லவ மன்னன் யார் ? அவன் எங்கிருந்தான் ?

7. சமணர்களைப் பற்றி நீ அறிவன யாவை ?

8. அரிகேசரியின் காலத்துத் தோன்றிய சைவப் பெரியார் யாவர் ?

9. 'அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள்,' என்பது எதன்பொருட்டுக் கூறப்பட்டுள்ளது ?

10. அரிகேசரியின்மீது பாடப்பட்ட நூல் யாது ?

11. பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் என்பனவற்றைப் பற்றி ஆசிரியரைக் கேட்டு அறிந்தவற்றை எழுதுக.

12. அவற்றை இயற்றியோர் யாவர் ?

13. அரிகேசரியின் ஆட்சிக்காலம் எது முதல் எது வரை ?

14. 'ஏழாம் நூற்றாண்டு மதமாற்றக் காலம்.'—எப்படி ?

## கட்டுரைப் பயிற்சி :

1. 'பாண்டியர்' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

2. 'நெடுமாறன் போர்ச் செயல்' என்பது பற்றி எழுதுக.

3. 'சமணரும் சைவரும்' என்பது பற்றி நீ அறிந்ததை எழுதுக.

4. 'மதமாற்றம் செய்பவர் கையாளும் முறைகள்' என்பது பற்றி எழுதுக.

5. 'மங்கையர்க்கரசியார்' என்னும் தலைப்பமைத்து, நீ அறிந்ததை எழுதுக.

## பயிற்சி—1

1. பதிகம், சைவசமய குரவர் நால்வர், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம்—இவற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

2. 'நாயன்மார்' என்பது எவர்க்குப் பெயர்? வைணவ அடியார்களுக்குப் பெயர் யாது?

3. 'தேவாரம்' என்னும் நூல் யாவர் பாடியது? 'திருவாசகம்' என்பது யார் பாடியது? நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் யாவர் பாடியது?

## பயிற்சி—2

1. 'அவன் செழியன் சேந்தனுக்கு மகனாவான்.'—இவ்வாக்கியத்தை வேறு எவ்வாறு மாற்றிக் கூறலாம்?

2. 'அரிகேசரி சோழனோடு போர் தொடுத்துச் சென்று பொருதான் அல்லவா?'—இவ்வாக்கியத்திற்குப் பெயர் என்ன? இதிலுள்ள வினாவை நீக்கி எழுதுக.

3. 'அவனுக்கு அடங்காத மன்னரே இலர்.'—இவ்வாக்கியத்தை வேறு எவ்வாறு கூறலாம்?

## பயிற்சி—3

1. மகேந்திர வர்மனைப் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

2. 'பாண்டியன் உற்ற நோய்' என்பது பற்றி நீ அறிந்தது என்ன?

3. சமணர்கள் எழுதிய நூல்களைத் தமிழர் படிக்கக் காரணம் என்ன? அதனால் நீ அறிவதென்ன?

## பயிற்சி—4

1. சைவம் தழைக்கத் தோன்றியவர் யாவர்? அவர்கள் கையாண்ட முறை யாது?

2. பாண்டி நாட்டில் சமண மதம் குன்றக் காரணம் என்ன? அதற்குக் காரணமாயிருந்தவர் யாவர்?

3. 'குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் மன்னனை வேண்டிக்கொள்ள, பாண்டியன் திருஞானசம்பந்தரை அழைத்துப் பிணியைப் போக்குமாறு வேண்டிக்கொண்டான்.'—இதனைச் சிறு சிறு வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

# 6. இரும்புக் கைத்தொழில்

1. பூமிக்குள்ளிருந்து எடுக்கப்படும் பொருள்கள் பல. அவற்றுள் உலோகங்கள் முக்கியமானவை. **இரும்பு, ஈயம், செம்பு, வெள்ளி, தங்கம்** என்பன ஐந்தும் **பஞ்சலோகங்கள்** என்றும், **ஐம்பொன்** என்றும் கூறப்படும். இவ்வைந்தும் மக்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

2. இவற்றுள் இரும்பு மிகவும் முக்கியமானது. குண்டூசி முதல் மிகப் பெரிய எந்திரங்கள் வரை செய்வதற்கு இரும்பு மிகவும் அவசியமாகும். இரும்பு மக்கள் வாழ்க்கையில் பல வகையில் பயன்படுகின்றது. இக்காலத் தொழில் வளர்ச்சிக்கு இரும்பு பெருஞ்சாதனமாய் உள்ளது. இக்காலத்தில் பல்வகைத் தொழிற்கும் எந்திரங்கள் தோன்றியுள்ளன. அவ்வெந்திரங்களெல்லாம் இரும்பினாலேதான் செய்யப்படுகின்றன. இரயில், மோட்டார், கப்பல் முதலான போக்கு வரவுச் சாதனங்கள் செய்ய இரும்பு வேண்டும். வீடு கட்டுதற்கும் இரும்பு வேண்டும். ஆடை நெய்தல், மாவரைத்தல், நெல் குற்றல், அச்சடித்தல் முதலான பல வகைத் தொழிற்சாலைகளிலுள்ள எந்திரங்கள் யாவும் இரும்பினால் ஆனவைகளே. வீட்டிலுள்ள கரண்டி, சட்டுவம், இருப்புச்சட்டி, தோசைக்கல் முதலானவையெல்லாம் இரும்பினால் ஆனவைகளே.

3. இரும்பு என்னும் உலோகத்தைக் கண்டு பிடித்த காலம் முதல் இந்தியாவில் பல்வேறிடங்களில் இரும்புத் தொழில் பரவியிருந்தது. இரும்பு இருக்கும் இடங்களை அறிந்து இரும்பு எடுத்தனர். இந்தியாவில் இரும்புச் சுரங்கங்கள் பற்பல இருந்தன. பர்மாவிற்குக் **கடாரம்** என்ற பெயர் வழங்கி வந்தது. கடாரத்திலிருந்து கிடைத்த இரும்பு மிகச் சிறந்தது என்பதை நூல்களால் அறியலாம்.

> "இமயத்திற் பிறந்த வயிரச் சாதியும்
> கடாரத் திரும்போடு கையகத் தடக்கி"

என்பது **பெருங்கதை** என்னும் நூலில் குறிக்கப்படுகிறது. மேனாடுகளில் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டால்,

"இந்திய நாட்டுக் கத்தி வேண்டுமா?" என்று வஞ்சினங்கூறிக்கொள்வாராம். இதனுல் இந்தியாவில் செய்த இரும்புக் கத்திகள் மிகச் சிறந்தவையாய் இருந்தன என்பது உணரலாமன்றே? இந்தியாவில் காணப்படும் அரிய காட்சிகளில் ஒன்று **குதுப் மினர்** என்னும் இரும்புத் தம்பம். இத்தூண் ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. இன்று வரை இத்தம்பம் துருவேறிக் கெடவில்லை. இத்தம்பம் இந்தியாவில் கிடைத்த இரும்பாலாகியது என்றால், இந்நாட்டு இரும்பின் மேன்மையும் தொழிலின் திறமையும் நன்கு விளங்கும் அல்லவா ?

4. முன் காலத்தில் இந்தியா இரும்புத் தொழிலில் மிகச் சிறந்து விளங்கியது. ஆனல், இந்நாளில் அத்தொழில் குன்றியிருப்பதன் காரணமென்ன? அமெரிக்கா, இங்கிலாந்து முதலான தேசங்களில் இரும்பு நிரம்பக் கிடைப்பதால், இரும்புத் தொழில் பெருகி வளர்ந்தது. அத்தேயத்தினர் இரும்பை உருக்கிப் பெரிய எந்திரங்களின் உதவியால் மக்களுக்கு வேண்டுவன யாவற்றையும் செய்தனர். அவர்கள் செய்த—மக்கட்குத் தேவையான—பொருள்கள் யாவும் அழகுடையவையாயும் விலையிற்குறைந்தவையாயும் இருந்தன. மற்றும், அவர்கள் அரசாங்கத்தின் உதவியால் மிகவும் இறக்குமதி செய்தார்கள். அதனுல் கைத்தொழிலாய் இருந்த இந்திய இரும்புத் தொழில் குன்றியது.

5. இந்தியாவில் பல இடங்களில் இரும்புக் கனிகள் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கின்றனர். சில இடங்களிலேதான் இரும்பு உருக்கி எடுக்கப்படுகிறது. இரும்பை உருக்கி எடுப்பதற்கு நிலக்கரியும் சுண்ணும்பும் வேண்டும். எனவே, எங்கெங்கு இரும்புக் கனி, நிலக்கரிச் சுரங்கம், சுண்ணும்புப் பாறை ஒன்றுக்கொன்று அருகில் கிடைக்கின்றனவோ, அங்கங்கு இரும்புத் தொழிற்சாலை உண்டாகலாம். அத்தகைய வாய்ப்பு இந்தியாவில் அமையவில்லை. **நிஜாம்** ராஜ்யத்திலும் **பீகார், ஒரிஸ்ஸா** ராஜ்யங்களிலும் நிலக்கரி கிடைக்கிறது ; அவ்விடங்களில் இரும்பு கிடைக்கவில்லை. இரும்பு கிடைக்குமிடத்திற்கு நிலக்கரியையும் சுண்ணும்பையும் கொண்டு

செல்வதில் மிக்க செலவும் காலதாமதமும் ஏற்படுகின்றன. எனினும், பீகார், ஒரிஸ்ஸா, வங்காளம் என்னும் ராஜ்யங்களில் அவ்வாய்ப்பு ஓரளவு அமைந்துள்ளதென்றே கூறலாம். நிலக்கரி கிடைக்காத இடங்களில் மரங்களை வெட்டிக் கரியாக்கி உபயோகிக்கின்றுர்கள்.

6. இந்நாளில் இரும்புத் தொழில் விருத்தியடைந்து வருகிறது. மைசூர் ராஜ்யத்தில் **பத்திராவதி** என்னும் இடத்தில் இரும்புத் தொழிற்சாலை தோன்றியுள்ளது. அது பத்திராவதி நதியின் கரையிலுள்ளது. **துங்கபத்திரா நதி**யோடு சேரும் கிளை நதிகளுள் ஒன்று **பத்திராவதி நதி**. பத்திராவதி நகர்க்கு அருகில் மேற்குத் தொடர்ச்சி மலையைத் தொடர்ந்துள்ளது, **பாபாபூடன்** மலைத்தொடர். அத்தொடரில் **கெம்மங்கண்டி**க் குன்றுகளில் இரும்பு மிகுதியாகக் கிடைக்கிறது. கிடைக்கும் இரும்பைக் குன்றின் மேலிருந்து கயிற்றின் உதவியால் கீழே இறக்கிப் பின்பு இரயில் மூலமாகப் பத்திராவதித் தொழிற்சாலைக்குக் கொண்டு வருகின்றனர். அங்கு நிலக்கரி இல்லாமையால், மரக்கட்டைக் கரியால் இரும்பை உருக்குகின்றனர்.

7. ஐந்து டன் மரக்கட்டைக்கு ஒரு டன் கரிதான் கிடைக்கும். பத்திராவதித் தொழிற்சாலையில் ஒவ்வொரு நாளும் எண்பது டன் இரும்பு உருக்குகிறுர்கள். ஒரு டன் இரும்பை உருக்க ஒரு டன் கரி வேண்டுமென்றுல், எண்பது டன் இரும்பையுருக்க நானூறு டன் மரக்கட்டை வேண்டுமன்றோ? மைசூர் அரசாங்கத்தில் முந்நூற்றைம்பது சதுர மைல் பரப்புள்ள பெரிய காடுகள் உள்ளன. அங்குப் பழைய மரங்கள் வெட்டப்படுகின்றன; புதிய மரங்கள் வளர்க்கப்படுகின்றன. மைசூர் ராஜ்யத்தில் இவ்வாறு ஏற்பாடு செய்து, பத்திராவதி இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்தியவர் மைசூர்த் திவாளுய் இருந்த **ஸர். எம். விசுவேசுவரையா** என்பவர் ஆவர். அவர் 1923–ஆம் ஆண்டில் அதனை அமைத்தார்.

8. பத்திராவதி இரும்புத் தொழிற்சாலையில் ஐந்து பிரிவுகள் உள்ளன: மதுச்சாரம் சுத்தம் செய்தல், கீல் தயாரித்-

தல், வார்ப்புச் சாலை, குழாய் வார்த்தல், யந்திரசாலை என ஐந்து வகைத் தொழில்களைக் கொண்ட பிரிவுகள் உள்ளன. இரும்புத் தொழிலினால் பிற நன்மைகளும் உண்டு. இரும்பை உருக்கும் பொழுது கீலும் மதுச்சாரமும் கிடைக்கின்றன.

9. இரும்பை எப்படி எடுக்கிறார்கள்? பூமியிலிருந்து எடுக்கும் போது இரும்பு மண்ணோடு கலந்திருக்கும். அதனுடன் சம எடைக் கரியைச் சேர்ப்பார்கள்; பின்பு சுண்ணும்பைக் கலப்பார்கள். அவ்வாறு கலந்தவற்றை உலையிலிட்டு எரித்தால், சுண்ணும்பு இரும்புடன் கலந்த மண்ணைத் தனியாகப் பிரித்துவிடும். இரும்பு உருகிக் குழம்பாகிவிடும். இரும்புக் குழம்பு கனமுடையது. அதனால், அது அடியில் தங்கிவிடும். மேலே அழுக்குப்போல மிதப்பன சுண்ணும்பும் மண்ணுமே. இரும்புக் குழம்பு அது காய்ச்சப்படும் பாத்திரத்தின் அடியிலுள்ள குழாய் மூலமாக வெளிப்படும். அவ்வாறு வெளிப்படும் இரும்புக் குழம்பை மணல் தரையில் தோண்டி வைக்கப்பட்ட குழியில் விடுவார்கள். அது குளிர்ந்து ஆறி இரும்புக்கட்டி ஆகும். அக்கட்டியிரும்பு சுத்தமானது. அதனால், அதன் விலை அதிகமாகும்.

10. கட்டியிரும்பைக்கொண்டுதான் வார்ப்பு இரும்பும் எஃகும் செய்யப்படுகின்றன. கட்டியிரும்பை வார்ப்பிரும்பாக மாற்றிப் பல வகைப்பட்ட குழாய்கள் வார்க்கிறார்கள். **பத்திராவதித் தொழிற்சாலை**யும், **டாட்டா இரும்புத் தொழிற்சாலை**யும் இந்தியாவில் இரும்புத் தொழிலை மேல் நிலைக்குக் கொண்டுவர முயற்சிகள் செய்து வருகின்றன. மரக்கட்டையைக் கரியாக்கும் பொழுது ஒரு வகைத் திரவப்பொருள் கிடைக்கின்றது. அதிலிருந்து **சாராயகாமிலம்** என்னும் ஒரு வகைத் திராவகமும் செய்ய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இக்காலம் எந்திரகாலம். எந்திரங்களினாலேதான் பல தொழில்கள் நடைபெறுகின்றன. யாவற்றிற்கும் இரும்பு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். அதனால், இரும்புத் தொழில் விருத்தியடைவதால் நம் இந்திய நாடு பல வகையிலும் முன்னேற்றம் அடையும்.

### அரும்பதம் : பொருள் காண்க :

| | | |
|---|---|---|
| சாதனங்கள் | குன்றியிருத்தல் | சம எடை |
| மேனுடு | அத்தகைய | வார்த்தல் |
| வஞ்சினம் | விருத்தி | மேல் நிலை |
| காட்சி | மூலமாக | முன்னேற்றம் |

### சிறு விடை வினுக்கள் :

1. பூமிக்குள்ளிருந்து எடுக்கப்படும் உலோகங்கள் எவை?
2. இரும்பு இக்காலத் தொழில் வளர்ச்சிக்கு அவசியம் என்பது எப்படி?
3. பர்மாவிற்குரிய மறு பெயர் யாது?
4. 'இந்திய நாட்டுக் கத்தி வேண்டுமா?'—இதனைக் கூறக் காரணம் என்ன? இதனுல் நீ அறிவதென்ன?
5. 'குதுப் மினர்' என்பதைப் பற்றி நீ அறிவதென்ன?
6. இந்தியாவில் இரும்புத்தொழில் குன்றக் காரணமென்ன?
7. இரும்பை எடுக்கும் முறை யாது?
8. பத்திராவதி இரும்புத் தொழிற்சாலையைப் பற்றி நீ அறிந்ததென்ன?
9. இரும்புத் தொழிலால் கிடைக்கும் பொருள்கள் யாவை?
10. இந்தியாவில் உள்ள மற்ருேர் இரும்புத் தொழிற்சாலை எது?

### கட்டுரைப் பயிற்சி :

1. இரும்பு பெரிய கைத்தொழிற்கும் சிறிய கைத்தொழிற்கும் வேண்டுவதாகும் என்பதை விளக்குக.
2. இரும்பினுல் செய்யப்படும் வாழ்க்கைக்குரிய பொருள்களைப் பற்றி விளக்கி எழுதுக.
3. இரும்பு எத்தகைய பெரிய தொழிற்சாலைகளுக்குப் பயன்படுகின்றது என்பதை விளக்குக.
4. வீடு கட்டுவதற்கு இரும்பு எவ்வகையில் பயன்படுகிறது?

## பயிற்சி—1

1. குண்டூசி முதல் எந்திரங்கள் வரை,
எறும்பு முதல் யானை வரை,
ஆண்டி முதல் அரசர் வரை,
இமயம் முதல் குமரி வரை.

இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

2. 'இக்காலத்திலுள்ள போக்கு வரவு சாதனம்' என்பது பற்றி எழுதுக.

3. சேர்த்து எழுதுக :—
மேல் + நாடு = மேனாடு
மேல் + நாள் =
மேல் + நிலை =
நல் + நூல் =
பல் + நூல் =

## பயிற்சி—2

1. வார்ப்பு இரும்பு, எஃகு இவற்றைக்கொண்டு செய்வனவற்றைக் குறிப்பிடுக.

2. பல்வகை, சாதனங்கள், ஏறக்குறைய, அத்தகைய, மேல் நிலை, விருத்தி, தொடர்ச்சி, மூலமாக, காட்சி—இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

## பயிற்சி—3

1. காடுகள் பயன்படும் முறையை விளக்குக.

2. 'தொழிலால் நாடு முன்னேற்றம் அடைகிறது,' என்னும் தலைப்பமைத்து, ஒரு பக்கம் எழுதுக.

3. இரும்பிற்கு மறு பெயர் யாது ? பெருங்கதை என்னும் நூலில் இரும்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது என்ன ?



# 7. பாண்டித்துரைத் தேவர்

1. தமிழ் மொழியை வளர்த்த பெருமை பாண்டியர்-களுக்கே உரியது. தமிழகத்தில் பாண்டி நாட்டிலேதான் **முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்** என்பன தோன்றி வளர்ந்தன. கடைச்சங்கம் இருந்தது சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்னலாம். சமணர்கள் தமிழகத்தில் வலிமை பெற்றிருந்த காலத்தில், கி. பி. நான்-காம் நூற்ருண்டில், சமணர் தமிழ்ச்சங்கம் ஒன்று இருந்த-தென்பதை அறிகிரேம். ஆனல், அதைப் பற்றிய வேறு விவரம் ஒன்றும் தெரியவில்லே. பிற்காலத்தில் அரசர்களும், குறுநில மன்னர்களும், செல்வர்களும் தமிழ்ப் புலவர்களே ஆதரித்துத் தமிழ் மொழியைப் போற்றி வந்தார்கள்.

2. பாண்டி நாட்டின் ஒரு பகுதியாய் விளங்குவது **சேது நாடு**. அந்நாட்டை ஆண்டு வரும் குறுநில மன்னர்கள்,

**சேதுபதிகள்** எனப்படுவார்கள். சேதுபதிகள் இராமநாத-புரத்தைத் தலைநகராகக் கொண்டவர்கள். சேதுபதிகள் வீரர்களாயும் வள்ளல்களாயும் பண்டு தொட்டு விளங்கு-பவர்கள்; தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பவர்கள்.

3. இராமநாதபுரத்தை **முத்து ராமலிங்க சேதுபதி** என்பார் ஆண்டு வந்தார். அவருக்கு மூத்த சகோதரர் **பொன்னுச்சாமித் தேவர்** என்பவராவர். பொன்னுச்சாமித் தேவர் இராமநாதபுர சம்ஸ்தானத்திற்குச் செய்த நன்மைகள் பல. முத்து ராமலிங்க சேதுபதி சிறுவராயிருந்த பொழுது பொன்னுச்-சாமித் தேவர், மேற்பார்த்து ஆட்சி புரிந்து வந்தார். அவர் காலத்தில் நாடு செழித்தது; குடிகள் பசியும் பிணியும் இன்றி வாழ்ந்தார்கள்.

4. பொன்னுச்சாமித் தேவரின் அரிய செயலுக்காகப் **பாலவனத்தம், பாலயம்பட்டி** முதலான ஜமீன் நிலங்கள் சேது-பதியால் அவருக்குக் கொடுக்கப்பட்டன. பொன்னுச்சாமித் தேவர் ஜமீந்தாரானார். பொன்னுச்சாமித் தேவர் தமிழ்ப் புலமை மிக்கவர்; தமிழபிமானம் உடையவர். அவர், **திருக்-கோவையார், திருக்குறள், சேது புராணம்** முதலான நூல்களைப் பதிப்பித்து வெளியிட யாழ்ப்பாணம் **ஆறுமுக நாவல**ருக்குப் பொருளுதவியவர்; **சந்திரசேகர கவிராஜ பண்டிதர்** என்பாரைக் கொண்டு '**தனிப்பாடல் திரட்டு**' என்னும் நூலையும் அச்சிட்டு வெளியிட்டார். **திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை** முதலான கவிஞர் பலர் அவரைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

5. பொன்னுச்சாமித் தேவருக்கு மூன்று புதல்வர் இருந்தனர். முதற்புதல்வர், பாலயம்பட்டி ஜமீந்தாராய் விளங்கிய **கோட்டைச்சாமித் தேவர்**; இரண்டாம் புதல்வர், **சீமைச்-சாமித் தேவர்**; மூன்றும் புதல்வர், **பாண்டித்துரைத் தேவர்**. பாண்டித்துரைத் தேவர், 1867–ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்குத் தந்தையார் இட்ட பெயர் **உக்கிர பாண்டியன்** என்பது.

6. இம்மூவரும் மிக்க இளம்பருவத்தினராயிருக்கும் பொழுதே பொன்னுச்சாமித் தேவர் இவ்வுலக வாழ்வை நீத்-

தார். **சேஷாத்திரி ஐயங்கார்** என்பவர், சிறந்த திறமை வாய்ந்த நியாயவாதி. அவர் பொன்னுச்சாமித் தேவருக்கு நம்பிக்கை உடையவராயும் அவரால் விரும்பப்படுபவராயும் இருந்ததனுல், அவரே கண்காணிப்பாளர் ஆனுர். சேஷாத்திரி ஐயங்கார் ஜமீனை மேற்பார்வையிட்டு வந்ததோடு, சிறுவர்களின் கல்வி-யையும் கவனித்து வந்தார். பாண்டித்துரைத் தேவர், இராமநாதபுரத்திலுள்ள ஆங்கிலக் கலாசாலையில் கல்வி கற்ருர்.

7. பாண்டித்துரைத் தேவர் இளம்பருவத்தில் **அழகர் ராஜு** என்பவரிடம் தமிழ்க் கல்வியைக் கற்ருர்; பின்னர் இராமநாதபுர சம்ஸ்தான வித்துவான் **சதாவதானம் முத்துச்சாமி ஐயங்கா**ரிடமும், மதுரை மகா வித்துவான் **இராமசாமிப் பிள்ளை**யிடமும், ஒரு தம்பிரானிடமும் கம்பராமாயணம், பெரிய புராணம், தணிகைப் புராணம், சைவ சித்தாந்த சாத்திரம், மற்ற இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். பாண்டித்துரைத் தேவர் மிகச் சிறந்த அறிவு படைத்த-வராயிருந்ததுடன், கவி பாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். அவர் தம் பதினெட்டாம் வயதில் தம் ஜமீன் நிருவாகத்தை ஏற்றுக்கொண்டார். தமிழ்ப் புலவர்களும் இசைப் புலவர்க-ளும் அவர் அவையை அலங்கரிப்பர். பாண்டித்துரைத் தேவர் தமிழ் நூல் ஆராய்ச்சியில் இன்பமாகக் காலத்தைக் கழிப்-பார். அவர் பேசும் ஆற்றலும் பெற்றிருந்தார். சைவசமயம் பற்றியும், தமிழ் மொழி பற்றியும் பாண்டித்துரைத் தேவர் கற்பனை நயமும் சொற்பொருள் நயமும் நன்கு விளங்கக் கேட்பார்க்கு மகிழ்ச்சியுண்டாகக் கேட்கக் கேட்கத் தெவிட்-டாதபடி பேசும் திறமை பெற்றிருந்தார். அவர் சென்னை, சேலம், சிதம்பரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை, கும்பகோணம், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, பாளை-யங்கோட்டை முதலான இடங்களுக்குச் சென்று, அரிய சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

8. பாண்டித்துரைத் தேவர் தாமே ஆசிரியராயிருந்து, மாணவர் பலர்க்குக் கல்வி கற்பித்தார்; வடமொழி தென்-மொழிப் புலவர்களையும் இசைப் புலவர்களையும் அவர்கள் தகுதியறிந்து பரிசளித்து ஆதரித்து வந்தார்; தம் ஆசிரியரின்

குமாரரான **திரு. மு. இராகவய்யங்கார்** அவர்களை ஊக்கமூட்டி ஆதரித்தார்; **டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்**களுக்குப் **புறப்பொருள் வெண்பா மாலை, மணிமேகலை, திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்** என்பவற்றைப் பதிப்பிக்கப் பொருளுதவி புரிந்தார்; ஐம்பத்து மூன்று தமிழ் நூல்களினின்றும் தேர்ந்தெடுத்த ஆயிரத்தறுநூற்றறுபத்தேழு செய்யுட்களைக் கொண்ட **பன்னூற்றிரட்டு** என்னும் நூலைத் தாமே தொகுத்து வெளியிட்டார்; '**செந்தமிழ்**' என்னும் பத்திரிகையில் பிற்காலத்தில் நூலாராய்ச்சி, சரித்திரம் என்பவை சம்பந்தமாகப் பல கட்டுரைகளை எழுதினர்; கம்பராமாயணச் செய்யுட்கள் சிலவற்றிற்கு மிக நயமான உரை கண்டார். '**தமிழ்ப் பழஞ்சரிதம்**' என்பது இவரால் எழுதப்பட்ட அரிய நூல் ஆகும். இவர் **காவடிச்சிந்து** ஒன்றும் இயற்றினர். சித்தாந்த நூல்கள் பலவற்றினின்றும் திரட்டிய **சைவமஞ்சரி** என்னும் நூலும் இவர் தொகுத்ததே. **தோத்திரத்திரட்டு** என்னும் அரியதொரு நூலையும் இவர் வெளியிட்டார். இவர்பால் வந்து ஆதரவு பெற்ற இசைப்புலவர்களுள் **மகா வைத்தியநாத ஐயர், பட்டினம் சுப்பிரமணிய ஐயர், திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், இராமநாதபுரம் பூச்சி ஐயங்கார்** என்னும் **சீனிவாசய்யங்கார்** என்பவர் சிலராவர்.

9. ஒரு சமயம் பாண்டித்துரைத் தேவர் மதுரையில் தங்கியிருந்த பொழுது சொற்பொழிவிற்காகக் **கம்பராமாயணம், திருக்குறள்** போன்ற நூல்கள் வேண்டியிருந்தன. அவற்றைப் பெற மதுரையில் பலரிடம் கேட்டும் கிடைக்கவில்லை. தமிழ் நிலைபெற்றுத் திகழ்ந்த மதுரையில் அரிய தமிழ் நூல்கள் கிடைக்கவில்லை! பாண்டித்துரைத் தேவருக்கு வருத்தம் மிக்கது. ஆகவே, அவர் அந்நகரில் தமிழ் மொழி வளர்ந்தோங்குமாறு செய்ய உறுதி கொண்டார்.

10. சென்னை மாகாண அரசியல் மாநாடு ஒன்று 1901ல் மதுரையில் கூடிற்று. அதற்குப் பாண்டித்துரைத் தேவர் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்து, வரவேற்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர். அக்கூட்டத்தின் முடிவில் அவர் தமிழின் பண்டை நிலையையும் பிற்கால நிலையையும் நன்கு விளக்கித் தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவுதலைப் பற்றிக் கூறினர்

மறு நாள் அதுபற்றி மற்றொரு கூட்டம் கூட்டிப் பேசினர். வந்திருந்த பொதுமக்களும் தமிழ்ச் சங்கம் நிறுவ வேண்டுமென்றும், அதற்குத் தங்களால் இயலும் உதவி புரிவதாகவும் கூறினர்கள். 1901–ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள், 14–ஆம் நாளன்று மதுரைச் சேதுபதி உயர்தரக் கலாசாலையில் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. அவ்விழா மூன்று நாள் நடைபெற்றது. அதற்குத் துணைவராயிருந்தவர், மதுரை வழக்கறிஞர் **திரு. T. C. சீனிவாசய்யங்கார**ாவர். இராமநாதபுரத்தரசர் **திரு. பாஸ்கர சேதுபதி**யும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார்.

11. தமிழ்ச் சங்கத்தின் சார்பில் **பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச்சாலை, செந்தமிழ்க் கலாசாலை, செந்தமிழ்ப் பத்திரிகை, அச்சகம்** என்னும் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. பாண்டித்துரைத் தேவர் மதுரையிலிருந்த தம்முடைய பெரிய மாளிகையைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்தார். பல மாணவர் தமிழ் கற்கலாயினர். பரீட்சையில் தேறியவர்கட்குப் பட்டமும் பரிசும் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

12. பாண்டித்துரைத் தேவர் மிகுந்த நாட்டுப்பற்றும் உடையவர். **திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் 'சுதேசக் கப்பற்கம்பெனி'**யை அமைக்க முயன்ற பொழுது பாண்டித்துரைத் தேவர் இலட்சம் ரூபாய் வரை அளித்து உதவி புரிந்தார்.

13. தவறில்லாத முறையில் அரிய தமிழ் நூல்களை வெளியிட வேண்டும் என்னும் கருத்துடையவர் பாண்டித்துரைத் தேவர். மதுரையில் **ஸ்காட்டு** என்னும் ஆங்கிலோ இந்தியர் வக்கீலாய் இருந்தார். அவர் திருக்குறளைத் தம் விருப்பம் போலத் திருத்தி, ஒரு பதிப்பு வெளியிட்டார். பாண்டித்துரைத் தேவர் அவரிடமிருந்த முந்நூறு பிரதிகளையும் விலைக்குப் பெற்றுத் தீயிலிட்டார். இதனால், தவறான பதிப்புடைய புத்தகங்கள் தமிழ் மாணவர் கையிற்கிட்டுதலாகாதென்பது பாண்டித்துரைத் தேவரின் கருத்து என்பது இனிது விளங்குகிறதன்றோ ?

14. இவ்வாறு தமிழ் மொழிக்குப் பல வகையில் தொண்டு பூண்டொழுகி வந்த பாண்டித்துரைத் தேவர், தம் நாற்பத்து

நான்காம் வயதில் இராமநாதபுரத்திலுள்ள **சோமசுந்தர விலாசம்** என்னும் தமது மாளிகையில், 1911–ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். தமிழ் மொழியை வளர்த்த பாண்டித்துரைத் தேவரை இழந்த தமிழகம், மிகவும் வருந்தியது. முன்பு இருந்த பாண்டியர் போல இந்நாளில் பாண்டித்துரைத் தேவர் நான்காம் சங்கத்தைத் தோற்றுவித்தார். அச்சங்கம் இன்றும் மதுரையிலிருந்து அரும்பணி ஆற்றி வருகிறது. அச்சங்கத்தின் பொன் விழா 1956–ஆம் ஆண்டு, மே திங்கள், 30–ஆந்தேதி முதல் ஜூன் திங்கள் 5–ஆந்தேதி வரை கொண்டாடப்பட்டது.

### அரும்பதம் : பொருள் காண்க :

| | | |
|---|---|---|
| சற்றேறக்குறைய | கண்காணிப்பாளர் | நிருவாகம் |
| விவரம் | மேற்பார்வை | பதிப்பிக்க |
| போற்றி | சதாவதானம் | நிறுவுதல் |
| பண்டு தொட்டு | தம்பிரான் | இயலும் |
| வெளியிட | சித்தாந்தம் | அரும்பணி |

### சிறு விடை வினாக்கள் :

1. பாண்டியர் தமிழ் வளர்த்த விதம் யாது ?
2. முச்சங்கங்கள் எவை ?
3. பிற்காலத்தில் தமிழ் வளர்ந்த விதம் யாது ?
4. பொன்னுச்சாமித் தேவர் தமிழ்க்குச் செய்த தொண்டு யாது ?
5. சேஷாத்திரி ஐயங்கார் என்பவர் யார் ?
6. பாண்டித்துரைத் தேவர் எவரிடம் தமிழ் கற்றார் ?
7. பாண்டித்துரைத் தேவரின் தமிழ்க் கல்வித் திறன் எப்படிப்பட்டது ?
8. பாண்டித்துரைத் தேவர் இயற்றிய நூல்கள் எவை ?
9. பாண்டித்துரைத் தேவர் காலத்தில் விளங்கிய இசைப்புலவர் யாவர் ?
10. தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தக் காரணம் என்ன ?

## கட்டுரைப் பயிற்சி :

1. 'பண்டை நாளில் தமிழ் வளர்ந்த முறை,' என்பது பற்றி எழுதுக.

2. 'தமிழ் மொழியை வளர்ப்பதற்கு நாம் செய்ய வேண்டுபவை' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. உங்கள் பள்ளியிலுள்ள தமிழ்ச்சங்கத்தின் வேலைகளைக் கூறுக.

## பயிற்சி—1

1. 'பொன்னுச்சாமித் தேவரின் அரிய செயலுக்காகப் பாலவனத்தம், பாலயம்பட்டி முதலான ஜமீன் நிலங்கள் சேதுபதியால் அவருக்குக் கொடுக்கப்பட்டன.'—இவ்வாக்கியத்தைச் **'சேதுபதி'** என்பதை எழுவாயாக அமைத்து மாற்றி எழுதுக.

2. கண்காணித்தல்—இப்பொருளையுடைய வேறொரு சொல் கூறுக.

3. பாண்டித்துரைத் தேவர் எவ்வெப்புத்தகங்களைப் பதிப்பிக்கச் சாமிநாதய்யருக்கு உதவினர் ?

## பயிற்சி—2

1. 'சேதுபதி' என்பவர் யார் ?

2. பாண்டித்துரைத் தேவர் காலத்துச் சேதுபதி யார் ?

3. பாண்டித்துரைத் தேவர் தம் தமிழாசிரியரிடம் மிக்க பற்றுடையவர் என்பதை எதனால் அறியலாம் ?

## பயிற்சி—3

1. 'பண்டு தொட்டு இன்றுகாறும்'—இதன் பொருளை அறிந்து இதை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

2. ஸ்காட்டு என்பவர் செய்ததென்ன ? பாண்டித்துரைத் தேவர் என்ன செய்தார் ? அதனால் நீ அறிவதென்ன ?

3. பாண்டித்துரைத் தேவர் நாட்டுப் பற்றுடையவர் என்பதை எச்செய்கையால் அறியலாம்?

# 8. தமிழ் மக்கள் குடியேற்றம்

1. ஒரு நாட்டிலுள்ளவர் வேறொரு நாட்டிற்குச் சென்று குடியேறி வாழ்தல் உண்டு. அவ்வாறு குடியேறி வாழ்தலுக்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு நாட்டில் மக்கள் தொகை பெருகிவிடுமானல், அந்நாட்டு மக்கள் வாழ்க்கை வளம் குறைவுபடாதிருக்கும்பொருட்டுப் பிற நாடுகளுக்குச் சென்று குடியேறுவார்கள். தாங்கள் தோன்றிய நாட்டிலேயே இருந்தால், மக்கள் தொகை மிகுவதனல் வருவாய் குன்றும்; வாழ்க்கை நிலையும் குறைந்துவிடும். பகை அரசர்கள் படையெடுத்து வந்தால், அக்காலத்தில் மக்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுப் பிற நாடுகளுக்குச் செல்லுவது உண்டு. அரசர்கள் பிற நாடுகளைக் கைப்பற்றித் தங்கள் நாட்டு மக்களை அந்நாடுகளில் குடியேற்றுவதும் உண்டு. பஞ்சம், உணவுக் குறைபாடு, தட்பவெப்ப நிலை முதலான காரணங்களாலும் ஒரு நாட்டவர் பிற நாடுகளில் குடியேறி வாழப் புகுவர். '**திரைகடலோடியும் திரவியம் தேடு,**' என்பது ஆன்றோர் மொழியல்லவா? சிலர் பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட்டும், வாணிபத்தின்பொருட்டும் பிற நாடுகளுக்குச் சென்று வாழ முனைவர்.

2. இந்நாளில் பலர் அன்னிய நாட்டிலிருந்து வந்து இந்திய நாட்டில் குடியேறி வாழ்வதை நாம் காண்கின்றோம். சிலர் அண்மையில் நடந்த போரினல் நிலபுலங்களையும், வீடு வாசல்களையும், அரிது முயன்று தேடி வைத்திருந்த செல்வம் முதலியவற்றையும் துறந்து வந்து வாழ்தலை நாம் காண்கின்றோம். அவர்களை '**அகதிகள்**' என்றும், '**அடைக்கலம் புக்கவர்கள்**' என்றும் வழங்குகின்றோம்; அவர்களுக்கு உணவு, உறையுள், தொழில், பொருள் முதலியன அளித்து உதவுகின்றோம்.

3. பண்டைக்காலத்தில் தமிழ் மக்களும் பிற நாடுகளுக்குச் சென்று குடியேறினர்கள். தமிழகம் கைத்தொழில், வாணிகம் முதலியவற்றில் சிறந்து விளங்கியது என்பதைத் தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம். கலத்தினும் காலினும்

சென்று தமிழ் மக்கள் வாணிபம் பேணினர்கள் என்று நூல்கள் கூறுகின்றன. மிகப் பழைய காலந்தொட்டே தமிழ் மக்கள் கிழக்கே சீனுவோடும், மேற்கே **பாலஸ்தீனம்** முதலான நாடுகளோடும் கடல் வழியாகச் சென்று வாணிபம் நடத்தினர்கள் என்பதை அறிகிறோம். அக்காலத்தில் வியாபாரிகள் கூட்டங்கூட்டமாய்ச் சென்றார்கள் என்பதும், அக்கூட்டத்திற்கு '**வாணிகச் சாத்து**' என்னும் பெயர் வழங்கியது என்பதும் அறிகிறோம். தமிழ் நாட்டுப் பொருள்களைக் கலத்தில் பிறநாடுகளுக்குக் கொண்டு செல்வதும், பிற நாட்டுப் பொருள்களைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து நிரப்புவதும் தமிழக வணிகர்களின் வழக்கமாகும்.

4. வாணிகம் பெருகப் பெருகத் தமிழ் வணிக மக்கள் பல திசைகளிலும் சென்றார்கள்; ஆங்காங்குள்ள நீர் வள நிலவளங்களைக் கண்டார்கள். அவ்வணிக மக்கள் தங்களோடு தங்கள் மக்களையும் ஆங்காங்கு அழைத்துச் சென்றார்கள். குடியேறி வசிக்கத் தக்க இடங்களில் தமிழ் வணிக மக்கள் தங்கள் நாட்டு மக்களோடு குடியேறி வசிக்கத் தொடங்கினர்கள். ஆரியர்கள் கூட்டங்கூட்டமாய் வந்து தங்கள் வாழ்க்கைக்குரிய இடங்களில் குடியேறி வசிக்கலானர்கள் என்பதை வரலாற்று நூலில் படித்திருக்கிறோமல்லவா? அது போலத் தமிழ் மக்களும் பிற நாடுகளுக்குச் சென்று குடியேறி வசிக்கலானர்கள்; அங்கு நிலத்தைத் திருத்திப் பண்படுத்தி வேளாண்மை செய்தார்கள்; தொழில்கள் பல புரிந்தார்கள். அவர்கள் தங்கள் நிலைக்கு ஏற்றவாறு நாடு நகரங்களை அமைத்துக்கொண்டார்கள். பிற நாட்டு நாகரிகம், மொழி, பழக்க வழக்கம் என்பன தமிழ் மக்களிடம் இடம் பெற்றன. அது போல, தமிழ் மக்களின் நாகரிகம், மொழி, பழக்க வழக்கங்கள், தெய்வ வழிபாடு முதலியன பிற நாட்டு மக்களிடமும் பொருந்துவனவாயின.

5. நம் நாட்டில் கி. மு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மிக்க நாகரிகமுற்று விளங்கினர் என்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. பஞ்சாபிலும் சிந்து மாகாணத்திலும், **ஹரப்பா**, **மோஹஞ்சதரோ** என்னும் இடங்-

களிலும் தோண்டிப் பார்த்த பொழுது அழகிய கட்டடங்கள் காணப்பட்டன; அணிகலன்கள் கிடைத்தன; வாழ்க்கைக்குத் தேவையான பல பொருள்கள் கிடைத்தன; சில எழுத்துக்கள் பொறித்த பாண்டங்கள் கிடைத்தன. அவற்றை ஆராய்ந்து, அவை '**தமிழர் நாகரிகச் சின்னங்கள்**' எனப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். புதைபொருளாராய்ச்சியால் தமிழர் எவ்வளவு தூரம் பரவியிருந்தனர் என்பதும், எத்துணை நாகரிகம் பெற்றிருந்தனர் என்பதும், எவ்வெத்தொழில்களில் சிறந்து விளங்கியிருந்தனர் என்பதும், பிறவும் வெளிப்படுகின்றன. தமிழர்கள் பஞ்சாபிலும் சிந்து மாகாணத்திலும் ஏராளமாகச் சென்று குடியேறியிருந்தார்கள் என்பதை அவ்விரு நகரப் புதைபொருள் ஆராய்ச்சி நன்கு புலப்படுத்துகின்றது.

6. தமிழ் மக்கள் **சுமத்திரா, ஜாவா, போர்னியோ, இந்தோசீனு** முதலான இடங்களில் குடியேறி வசித்தார்கள். இந்தோசீனுவில் **காம்போஜம், சம்பா** என்னும் இரண்டு நாடுகளிலும் தமிழ் மக்கள் குடியேறி வாழ்ந்ததற்குப் பற்பல சான்றுகள் கிடைத்துள்ளன. **சுமத்திரா, ஜாவா** என்னும் தீவுகளும், பர்மாவில் **ஸ்ரீவிஜய**மும் தமிழ் மக்கள் குடியேறிச் சிறக்க வாழ்ந்த பகுதிகளாகும். **இலங்கை, பிஜித் தீவு, மடகாஸ்கர், தென்னுப்ரிக்கா** முதலான இடங்களுக்கும் தமிழ் மக்கள் சென்று குடியேறியுள்ளார்கள். இன்றும் **பர்மா, மலேயா, இலங்கை** முதலான நாடுகளில் தமிழ் மக்கள் குடியேறி வாழ்வதைக் காணலாம். ஸ்ரீவிஜயம் என்ற நாடு, கடலாதிக்கம் பெற்ற நாடு. சோழ நாட்டிற்கும் அந்நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அந்நாட்டு வணிக மக்கள் திரள் திரளாய் வந்து, தமிழகத்தில் வாணிகம் செய்தார்கள். அந்நாட்டு மன்னனுன **சூடாமணி வர்மன்**, தன் நாட்டு மக்களுக்காக நாகப்பட்டினத்தில் '**சூடாமணி வர்ம விஹாரம்**' என்னும் கோவிலைக் கட்டினுன். அச்சூடாமணி வர்மனேடு நட்புப் பூண்ட சோழ மன்னன், **ராஜ ராஜ சோழன்** என்பவனுவன். அச்சோழ மன்னன் **ஆனை மங்கலம்** என்னும் ஊரை அக்கோவிலுக்கு மானியமாக அளித்தான். அதனுல், அக்-

கோவிலுக்கு **ராஜராஜப் பெரும்பள்ளி** என்னும் பெயருமுண்டா–யிற்று என்பதைச் சோழர் சரித்திரத்தால் அறிகிறோம்.

7. ஜாவாத் தீவில் **பரபூதூர்** என்னும் ஸ்தம்பம் உள்ளது. அது மிகப் பெரியது; சிறந்த சிற்ப வேலைப்பாடு கொண்டது; உலகப் புகழ் பெற்றது. அது புத்த மதத்தவர்களால் நிரு–மாணிக்கப்பட்ட ஸ்தம்பமாகும். அத்தம்பத்தில் புத்தர் உருவங்களையும், புத்தர் சரித்திர நிகழ்ச்சிகளையும், ஜாதகக் கதைகளையும் குறிக்கும் சிற்பங்கள் அழகுறக் காணப்படு–கின்றன. மற்றும் விலங்குகள், கப்பல்கள், யாளி முகங்கள் முதலியனவும் அத்தம்பத்தில் அழகு பெற அமைந்திருத்தலை இன்றும் காணலாம். கோவில்களும், அவற்றின் வீதிகளும், கோபுரங்களும் கண்களைக் கவரும் காட்சியோடு **கம்போடியா–விலுள்ள அங்கோர்வாட்**டில் உள்ளன. அவை யாவும் தமிழகக் கோவில்களில் உள்ளன போலக் காணப்படுகின்றன. மற்றும், இராமாயணம், பாரதம், புராணங்கள் என்பவற்றை விளக்–கும் சிற்பங்களையும் அக்கோவில்களிற்காணலாம். இவற்றால் அந்நாடுகளில் எல்லாம் நம் தமிழ் நாட்டு மக்கள் குடியேறிச் சிறக்க வாழ்ந்திருந்தார்கள் என்பது நன்கு புலனாகின்ற–தன்றோ? நம் நாட்டில் பிற நாட்டு மக்கள் வந்து குடியேறிக் கட்டடங்கள் கட்டி வாழ்தலை நாம் காண்கின்றோம். இவற்றால், மக்கள் செழிப்புள்ள நாடுகள் பலவற்றிற்கும் சென்று குடியேறி வாழ்தல் மனித இயற்கையாகும் என்பதை உணரலாம். இவ்வாறு குடியேறி வாழ்தல் மேனாட்டவரிட–மும் காணலாம்.

**அரும்பதம் : பொருள் காண்க :**

| | | |
|---|---|---|
| குடியேறி | அண்மை | பொருந்துவன |
| வாழ்க்கை வளம் | நிலபுலம் | சான்று |
| வருவாய் | வீடு வாசல் | சின்னம் |
| திரை | அடைக்கலம் | எத்துணை |
| ஈடுபட்டு | புக்கவர் | விஹாரம் |
| முனைவர் | கலம் | நிருமாணித்தல் |
| அன்னிய நாடு | பண்படுத்தல் | நிகழ்ச்சி |

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
89841
சென்னை-600 008
TB
031(7)
N56

### சிறு விடை வினுக்கள் :

1. ஒரு நாட்டிலுள்ளவர் பிறிதொரு நாட்டிற்குச் சென்று குடியேறக் காரணம் என்ன ?

2. இக்காலத்தில் நம் நாட்டில் பிற நாட்டு மக்கள் எக்-காரணங்களால் வந்து குடியேறியுள்ளார்கள் ?

3. தமிழ் நூல்களினுல் நாம் தமிழகத்தைப் பற்றி அறிவ-தென்ன ?

4. தமிழ் நாட்டு வாணிகம் பற்றி நாம் அறிவதென்ன ?

5. 'வாணிகச் சாத்து' என்பது யாது ?

6. பிற நாடுகளில் தமிழ் மக்களின் சின்னங்கள் காணக் காரணம் என்ன ?

7. ஹரப்பா, மோஹஞ்சதரோ என்னும் இடங்களைப் பற்றி நீ அறிந்தன யாவை ?

8. தமிழ் மக்கள் எந்நாடுகளுக்கெல்லாம் சென்று குடியேறி-னூர்கள் ?

9. 'ராஜராஜப் பெரும்பள்ளி' என்னும் பெயர் எதற்கு ஏன் வழங்குகிறது ?

10. அங்கோர்வாட்டில் காணப்படுவன யாவை ?

### கட்டுரைப் பயிற்சி :

1. 'தமிழ் நாட்டில் அகதிகள்' என்பது பற்றி நீ அறிந்ததை எழுதுக.

2. 'ஆங்கிலேயர் குடியேற்ற நாடுகள்' என்பது பற்றி எழுதுக.

3. மக்களுக்குக் குடியேற்றம் நலந்தருவதேயாகும்.—விளக்குக.

### பயிற்சி :—1

1. 'திரைகடலோடியும் திரவியம் தேடு.'—இதன் பொருள் என்ன ? இதனுல் நீ அறிவதென்ன ?

2. பாகிஸ்தான், இந்தியாப் பிரிவினையால் மக்கள் அடைந்த நிலை யாது? குடியேற்றம் எவ்வாறு நடைபெற்றது?

3. 'கலத்தினும் காலினும் சென்று தமிழ் மக்கள் வாணிபம் பேணினர்கள்.'—இதன் பொருள் என்ன?

## பயிற்சி—2

1. கூட்டங்கூட்டமாய், திரள்திரளாய் — வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. இறக்குமதி—இதற்கு எதிர்ப்பதம் தருக.

3. ஆரியர்களைப் பற்றி வரலாற்று நூல்களிலிருந்து அறிந்ததை எழுதுக.

## பயிற்சி—3

1. புதைபொருளாராய்ச்சியால் விளைந்த நன்மைகள் யாவை?

2. 'தமிழர் நாகரிகம்' என்பது பற்றி இப்பாடத்தால் நீ அறிவதென்ன?

3. சோழர் மதத் துவேஷம் உடையவரல்லர் என்பதை எதனால் அறியலாம்?



## 9. பாரதியார்

1. உலகில் கவிஞர்களைப் போற்றாத நாடு இல்லை. கவிஞர் தம் கவி வன்மையால் மக்கள் மனத்தைக் கொள்ளை கொள்கின்றனர். கவிஞர்கள் மறைந்திடினும், அவர்கள் இயற்றிய நூல்களைப் படிக்கும் பொழுதெல்லாம் அவர்கள் நம் கண்முன் நின்று உரையாடுவது போல நாம் உணர்ச்சி கொள்கிறோம். அவர்களால் நாட்டிற்கு அழியாப்புகழ் உண்டாகின்றது. உண்மைக் கவிஞர்களின் கவிகள் அக்காலத்திற்கும், இக்காலத்திற்கும், வரும் காலத்திற்கும் பொருந்துவனவாயுள்ளன. 'புலவர் பாடாத புகழ், புகழன்று,' என்று பண்டைத் தமிழ் மன்னர் கருதினர். அறிவு நிரம்ப வேண்டுமாயின், கவிஞர்களிடத்தன்றோ உலகம் செல்ல வேண்டும்? ஒரு நாட்டு மக்களின் பெருமைகளை அந்நாட்டுக் கவிஞர்களின் வாக்கினால் பிற நாட்டார் அறிந்து மதிக்கின்றனர்.

2. நாட்டின் வாழ்விற்குக் கவிஞர்கள் இன்றியமையாதவர்கள். அவர்கள் அரசர்களையும், வள்ளல்களையும், வீரர்களையும், அறிஞர்களையும் தங்கள் கவிதைகளில் பாராட்டிப் பின் சந்ததியார் மறவாதிருக்கும்படி செய்கின்றார்கள். தமிழகத்தில் காலத்திற்கேற்பப் பற்பல கவிஞர் தோன்றியுள்ளனர். அவர்கள் தங்கள் காலத்திற்குப் பொருந்த நூல்களை இயற்றினார்கள். அத்தகையாருள் **சுப்பிரமணிய பாரதியா**ரும் ஒருவர். ஆனால், மற்றக் கவிஞருக்கும் பாரதியாருக்கும் வித்தியாசமுண்டு: பாரதியார் **புதுமைக்கவிஞர்; புரட்சிக்கவிஞர்; தேசீயக்கவிஞர்.**

3. பாரதியார் தோன்றிய காலத்தை நாம் உணர்ந்தால்தான் பாரதியாரின் பெருமையை உணர முடியும். தமிழ் நாட்டில் ஆங்கிலக் கல்வி பரவியது. ஆங்கிலம் கற்றோரே உத்தியோகமும், பதவியும், சிறப்பும் பெற்றனர். அதனால், யாவரும் ஆங்கிலம் கற்பதில் ஊக்கம் காட்டினர். தமிழர் தமிழை அறவே மறந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா முழுவதும் அடிமையுற்றுக் கிடந்தது. தமிழர், நாட்டுப் பற்றும் மொழிப்பற்றுமின்றி, ஆங்கிலேயருக்கு அடிமைகளாய் வீரம் குன்றியிருந்தனர். எங்கேனும் ஒரு சிலர் தமிழ் மொழியைப் பழைய முறையில் கற்றுப் பேணி வந்தனராயினும், அன்னார் தமிழ் மக்களின் நெஞ்சத்தில் நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் ஊட்டும் வகையறியாதவராயிருந்தனர். ஆதலின், தமிழ் மொழிப் பயிற்சியும் குன்றியிருந்தது. இந்நிலையில் நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் தமிழர் நெஞ்சத்தில் புகுத்தப் பாரதியார் தோன்றினார்.

4. திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் என்னும் மூன்று ஜில்லாக்களும் சேர்ந்தது பாண்டி நாடு. பாண்டி நாடே புலவர் பலர்க்குப் பிறப்பகம். புலவர் தோன்றும் நாடும் ஊரும் அழியாப் புகழ் பெறும் பேறுடையன. "காதல் கூர் கவிதை பாடும் கபிலனார் பிறந்த மூதூர், வியன் திருவாதவூர்," என்று கூறுவதும் காண்க. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளது **எட்டையபுரம்** என்னும் ஜமீன். எட்டையபுர ஜமீந்தார், தாம் தமிழ்க் கல்வியைச் சிறக்கக் கற்றிருந்ததோடு

தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்து வந்தார். **கடிகை முத்துப் புலவர்** என்ற சிறந்த புலவரும் அச்சம்ஸ்தான வித்துவானே. எட்டையபுர ஜமீந்தார் வள்ளலாயும், புலவரைப் போற்றும் புலவராயும், புலவர்களோடு உரையாடித் தமிழாராய்ச்சி செய்து பொழுது போக்கும் இயல்புடையவராயும் இருந்தார். அதனால், பல்வேறு நாடுகளிலிருந்தும் புலவர் பெருமக்கள் ஜமீந்தாரிடம் வருவார்கள் ; தங்கள் ஆராய்ச்சித் திறனையும் கவித் திறனையும் காண்பிப்பார்கள் ; பரிசு பெற்றுச் செல்வார்கள்.

5. எட்டையபுர ஜமீனில் **சின்னச்சாமி ஐயர்** என்பார் ஒருவர் இருந்தார். அவர் தர்க்கம், கணிதம், இலக்கியம், இலக்கணம் என்பவற்றில் சிறந்த பயிற்சியுடையவர் ; ஆங்கிலமும் வடமொழியுமுணர்ந்தவர் ; கூரிய மதியினர். அவர் ஜமீனில் வேலை பார்த்து வந்தார். அவர் மனைவியார் **இலக்குமி அம்மையார்.** ஐயர் அனைவராலும் விரும்பப்பட்டு, யாவரும் மதிக்க வாழ்ந்தார். அவர் செய்த புண்ணியப் பயனாய் 1882–ஆம் ஆண்டு சுப்பிரமணிய பாரதியார் பிறந்தார். சின்னச்சாமி ஐயர், மைந்தரை மிக்க மகிழ்ச்சியோடு வளர்த்து வந்தார். குழந்தைக்கு ஐந்து வயது நடக்கும் பொழுது இலக்குமி அம்மையார் காலமானார். சின்னச்சாமி ஐயரே தந்தையாரும் தாயாருமாய் இருந்து தனயரை வளர்த்து வந்தார்.

6. சுப்பிரமணிய பாரதியாரது செல்லப் பெயர் **சுப்பையர்** என்பது. அவர் கல்வி கற்றற்குரிய பருவத்தில் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பள்ளியில் அவர் மாணவர் பலரோடும் கலந்து பழகுவதில்லை. வீட்டில் சின்னச்சாமி ஐயர் தமிழ் நூல்களைக் கற்றுக்கொடுத்தார். பாரதியார் தந்தையாரோடு அரண்மனைக்குச் செல்வார் ; அங்கு வரும் புலவர் பெருமக்கள் பேசுவதைக் கூர்ந்து கேட்பார் ; புலவர்கள் அவருடைய கூரிய மதியைக் கண்டு வியந்தார்கள். இளம்பருவத்திலேயே அவர் நா, கவிதை மாரி பொழியத் தொடங்கியது. அவர் சிற்சில பாடல்களைப் பாடி எடுத்துச்சென்று ஜமீந்தாருக்குக் காட்டுவார். ஜமீந்தார் அவற்றைக் கேட்டு மகிழ்வார் ; 'பாரதியால் எட்டையபுரம் பின்பொருகால் பெருமை எய்தும்!' என்பார்.

பாரதியார் பதின்மூன்றுவது வயதிலேயே கவிதைகள் பாடத் தொடங்கினர். அத்திறனைக் கண்ட புலவர்கள், அவருக்குப் '**பாரதி**' என்ற பட்டம் சூட்டினர்கள். பாரதி என்னும் சொல் கலைமகளைக் குறிக்கும். அப்புலவர்கள் சூட்டிய பாரதிப் பட்டமே பாரதியாருக்கு நிலைத்துவிட்டது.

7. பாரதியார் திருநெல்வேலி **இந்துக் கல்லூரி**யிற்சேர்ந்து மூன்றுண்டுகள் படித்தார். அவருக்குப் பதினைந்தாவது வயது நடக்கும்பொழுது **செல்லம்மாள்** என்னும் நங்கையாரை மணம் பேசித் திருமணம் செய்து கண்டு மகிழ்ந்தார் சின்னச்சாமி ஐயர். ஆனல், ஓராண்டிற்குள் சின்னச்சாமி ஐயரும் இவ்வுலக வாழ்வை நீத்தார். பின்னர்ப் பாரதியார் காசியில் வசித்து வந்த தம் அத்தையாரிடம் சென்றுர். அங்கு **இந்து சர்வ கலா–சாலை**யில் சேர்ந்து, ஹிந்தி, சம்ஸ்கிருதம், ஆங்கிலம் என்னும் மொழிகளைப் பயின்றுர். எனினும், தமிழ் மொழியை அவர் மறக்கவில்லை.

8. காசிக்குச் சென்ற எட்டையபுர ஜமீந்தார் அவரை அழைத்து வந்து தம் அரண்மனையில் வைத்துக்கொண்டார். எட்டையபுர சம்ஸ்தானப் புலவராகப் பாரதியார் 1904–ஆம் ஆண்டு அமர்ந்தார். அக்காலத்தில் அவர் கவிதைகள் இயற்றி ஜமீந்தாரை மகிழ்வித்தார்; **அண்ணுமலை ரெட்டியார்** பாடிய காவடிச் சிந்தைப் போலப் பிறர் எவரும் இயற்ற முடியா–தென்று கூறிய புலவர்கள் நாண, ஒரே நாளில் சிறந்த காவ–டிச் சிந்து ஒன்று இயற்றினர். சுதந்தரமாக வாழ விரும்பிய பாரதியாருக்கு ஜமீந்தாரிடம் கட்டுப்பட்டிருக்க மனம் ஒருப்–படவில்லை. அதனல், அவர் ஜமீனிலிருந்த வேலையை விடுத்து, மதுரைக்கு வந்தார்; மதுரையில் **சேதுபதி கலாசாலை**யில் தமிழாசிரியராய்ச் சிறிது காலம் இருந்தார். அப்பணியும் பாரதியார் மனத்திற்கு ஒவ்வாதொழிய, அதனையும் விடுத்துச் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

9. அவர் சென்னையில் **சுதேசமித்திரன்** பத்திரிகையில் உதவி ஆசிரியராய் இருந்தார்; **பால பாரதம், இந்தியா** என்ற பத்திரிகைகளையும் நடத்தினர்; அப்பத்திரிகைகளில் நாட்டுப்

பற்றையும் மொழிப் பற்றையும் ஊட்டும் கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதினர். அக்காலத்தில் நாட்டில் சுதந்தரப் போராட்டம் வலிமை பெற்றது. சுதந்தர தாகம் மிகுந்த பாரதியார், அப்போராட்டத்தில் இறங்கினர்; அரசாங்கத்தை எதிர்த்துப் பல கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதினர். அரசாங்கம் அடக்கு முறையைக் கையாண்டது ; பத்திரிகைகளைப் பறிமுதல் செய்தது; ஆசிரியர்களைச் சிறைப்படுத்தியது. வீணில் சிறையில் அடைபட்டுத் தேசப்பணி புரியாதிருக்கப் பாரதியார் விழையவில்லை ; ஆதலால், **புதுவை**க்குச் சென்ருர். புதுச்சேரி பிரெஞ்சுக்காரருக்குரியது. அங்கு அரசியல் வாதிகளைக் கைது செய்தல் ஆங்கில அரசாங்கத்தாருக்கு இயலாது.

10. புதுச்சேரிக்குச் சென்ற பாரதியாருக்கு ஏற்பட்ட இன்னல்கள் பற்பல: வறுமை ஒரு புறம் அவரை வாட்டியது. சுடச்சுட ஒளிரும் பொன்னே போல, பாரதியார் பற்பல இன்னல்களுக்கிடையில் ஊக்கம் குன்ருது, உள்ளக் கிளர்ச்சியுடன் கவிதைகள் பாடும் இயல்புடையவராய் விளங்கினர். அவர் கவிதைகளில் பெரும்பாலன, புதுச்சேரியில் உருவாயின. பாரதியாருக்குப் புதுச்சேரியில் **யோகி அரவிந்தர், சுப்பிரமணிய சிவா, வ. வே. சுப்பிரமணிய ஐயர்** முதலான சான்ருேர்களின் நட்புக் கிடைத்தது. சில ஆண்டுகள் கடந்தன. பின்னர்ப் பாரதியார் புதுச்சேரியை விடுத்துக் **கடைய**த்திற்குச் சென்ருர்.

11. பாரதியார் சாதி சமயக் கட்டுப்பாடுகளைக் கடந்தவர்; 'மக்களனைவரும் ஒரு குலம்,' என்று கருதும் இயல்பினர். மக்களுள் உயர்வு தாழ்வு என்பதை அவர் கருதியதில்லை. அவர் யாவரையும் சரி சமமாகப் பார்க்கும் பொது நோக்குடையவர். அவரது போக்கு, கடைய மக்களுக்கு வெறுப்பைத் தந்தது. அதனல் அவருக்கு நேர்ந்த இன்னல்கள் பலப்பல. பாரதியார் எதற்கும் அஞ்சினவரல்லர். அவருக்கு இரு புதல்வியர் இருந்தனர். அவர் மீண்டும் குடும்பத்தோடு சென்னைக்கு வந்தார் ; சென்னை நகரில் திருவல்லிக்கேணியில் தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் வசித்து வரலானர் ; சுதேசமித்திரன் பத்திரிகையில் மீண்டும் துணையாசிரியராய் அமர்ந்தார் ; கட்டுரைகளும் கவிதைகளும் எழுதி வந்தார்.

12. பாரதியார் வறுமையில் செம்மை வாய்ந்தவர்; 'ஏற்பது இகழ்ச்சி,' என்னும் கொள்கையுடையவர் ; வீரத்திற் குன்றுதவர் ; தேசப்பற்றும் மொழிப் பற்றும் மிக்கவர். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் என்பன அவர் உள்ளத்தில் நிறைந்திருந்தன. அவர் மொழிப் பற்றும் நாட்டுப்பற்றுமின்றி உறங்கிக் கிடந்த தமிழ் நாட்டு மக்களைத் தம் கவிதைகளாலும் கட்டுரைகளாலும் தட்டியெழுப்பிப் புத்துயிர் அளித்தார் ; ஊக்கம் கொள்ளுமாறு செய்தார் ; தமிழ் மொழிக்குப் புது நெறியில் கவிதைகள் புனைந்தார். அவர் கவிகளில் அன்பும், வீரமும், நாட்டுப் பற்றும் விளங்கும். எளிய நடையில் இனிய முறையில் புது நெறி பற்றி எழுந்த அவர் கவிகள், கேட்பார் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாகும். காலப் போக்கிற்கு ஏற்பக் கவிதைகளை இயற்றித் தந்தவர் பாரதியார். தமிழின் மறுமலர்ச்சிக்குப் பாரதியார் தந்தையாராவார். பாரதியாரிடம் அன்பும், அருளும், இரக்கமும், ஈகையும் குடிகொண்டிருந்தன.

13. பாரதியார் திருவல்லிக்கேணியில் வசித்த காலத்தில் பார்த்தசாரதி சுவாமி கோவிலுக்குச் செல்வார் ; அங்கு இருந்த யானைக்குத் தேங்காய் பழம் கொடுத்துப் பழகுவார். ஒரு நாள் யானை மதம் கொண்டிருந்தது. அதனைப் பாரதியார் அறியார் ; வழக்கம் போலத் தேங்காய் பழங்களைக் கொடுக்கச் சென்றுர். யானை அவரைத் தூக்கியெறிந்தது. அது முதல் அவர் நோய் வாய்ப்பட்டார். எவ்வளவு சிகிச்சைகள் செய்தும் பயனின்றிக் கழிந்தன. பாரதியார் 1921-ஆம் ஆண்டு, செப்டெம்பர்த் திங்கள், 11-ஆம் நாள் பூத உடலை நீத்துப் புகழ் உடல் பெற்றுர்.

14. பாரதியார் தேசிய கீதங்களைப் பாடியுள்ளார் ; **கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்தி சூடி, நான்மணி மாலை** முதலான அரிய கவிதைகளை இயற்றியுள்ளார் ; அனேக உரை நடை நூல்களையும் இயற்றினர். அவர் வாழ்ந்த காலத்தில் வறுமையினல் மிகவும் வருந்தினர். தமிழ் மக்கள் அவருடைய அருமை பெருமைகளைப் பின்னரே உணர்ந்தார்கள் ; அவரது நினைவுக்குறியாக எட்டையபுரத்தில் '**பாரதி**

**மண்டபம்**' கட்டினர்கள். அதனைச் **சக்கரவர்த்தி ராஜ-கோபாலாசாரியார்** திறந்து வைத்தார். ஆண்டுதோறும் பாரதி விழாத் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

### அரும்பதம்: பொருள் காண்க:

| | | |
|---|---|---|
| உணர்ச்சி | பதவி | இன்னல் |
| வாக்கு | கவித்திறன் | கிளர்ச்சி |
| கவிதை | தனயர் | மறுமலர்ச்சி |
| பாராட்டி | ஒருப்படல் | காலப்போக்கு |
| உத்தியோகம் | பறிமுதல் | |

### சிறு விடை வினுக்கள்:

1. கவிஞர் இயல்பும் சிறப்பும் யாவை?
2. 'கவிஞர் நாட்டிற்குக் கண் போன்றவர்,' என்பது எப்படி?
3. பாரதியார் காலத்தில் தமிழகத்தின் நிலை யாது?
4. பாரதியார் எங்குப் பிறந்தார்? அவர் தாய்தந்தையர் யாவர்?
5. பாரதியாரின் இளமைப்பருவம் எப்படிக் கழிந்தது?
6. பாரதியார் என்னென்ன தொழில்களில் ஈடுபட்டிருந்தார்?
7. பாரதியார் காவடிச்சிந்து பாடக் காரணம் என்ன?
8. பாரதியார் இயற்றிய நூல்கள் எவை? அவர் தமிழுக்கும் தமிழருக்கும் செய்த தொண்டு யாது?
9. பாரதியாரின் குணநலன்கள் யாவை?

### கட்டுரைப் பயிற்சி:

1. 'ஆங்கிலக் கல்வியால் விளைந்த நன்மை தீமைகள்' என்பது பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.
2. 'பாரதியார் புதுமைக் கவிஞர்' என்பதை விளக்குக.
3. 'பாரதியார் தமிழ் நாட்டிற்கும் மொழிக்கும் புத்துயிர் அளித்தார்,' என்பதை விளக்கி எழுதுக.

## பயிற்சி—1

1. தமிழ் மன்னர் எதனைச் சிறப்பாகக் கருதினர் ? ஏன் ?

2. சான்றோர் நூல்கள் எந்த உணர்ச்சியை ஊட்டுகின்றன ?

3. கவிஞர் எத்தகைய நன்மையைச் செய்கின்றனர் ?

## பயிற்சி—2

1. நாட்டுப் பற்று, மொழிப் பற்று—இவற்றை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

2. எட்டையபுர ஜமீனைப் பற்றி நீ அறிவதென்ன ?

3. பாரதியார் எத்தனை மொழிகளைக் கற்றார் ? அவை யாவை ? அவர் வாழ்க்கையிலிருந்து நீ அறிவது என்ன ?

## பயிற்சி—3

1. 'சுடச்சுட ஒளிரும் பொன்னே போல'—இதனை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

2. புதுச்சேரியில் பாரதியாருக்குக் கிடைத்த நண்பர் யாவர் ?

3. வறுமையிற்செம்மை, ஏற்பது இகழ்ச்சி, சாதி சமயக் கட்டுப்பாடு, ஏற்றத் தாழ்வு, காலப் போக்கு—இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

## பயிற்சி—4

1. பாரதியார் பாடலில் நீ அறிந்த ஒன்றை எழுதுக.

2. '**ஓடி விளையாடு பாப்பா**' என்று தொடங்கும் தொகுதிப் பாடல்களைப் படித்து, பின்பு அவற்றில் அவர் கூறும் கருத்துக்களை எடுத்து எழுதுக.

3. பாரதியாரைப் பின்பற்றிக் கவி பாடும் இக்காலப் புதுமைக் கவிஞர் யாவர் ?

# செய்யுட்பகுதி

## I. கடவுள் வாழ்த்து

### 1. தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே.

—திருநாவுக்கரசர்

### 2. திவ்வியப்பிரபந்தம்

கங்கையில் புனித மாய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழை யேனே.

—தொண்டரடிப்போடியாழ்வார்

## II. நீதி

'தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம்!' என்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்;
இரைக்கும்வண் டூதுமலர் ஈர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. 1

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க;—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 2

நன்னெறி ] [ சிவப்பிரகாசர்

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை ; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை ; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ; ஈன்றாளின்
எண்ணக் கடவுளும் இல். 1

திரியழல் காணின் தொழுப ; விறகின்
எரியழல் காணின் இகழ்ப ;—ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
பெருமைபா ராட்டு முலகு. 2

நான்மணிக் கடிகை ] [விளம்பி நாகனார்

தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ராற்கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாக எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்
ஆக எனவாழ்தல் நன்று. 1

பூத்தாலும் காயா மரமுமுள ; நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார் ;—பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள ; பேதைக்
குரைத்தாலும் தோன்றா துணர்வு. 2

சிறுபஞ்சமூலம் ] [ காரியாசான்

கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு ? 1

கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். 2

நீதி நெறி விளக்கம் ] [ குமரகுருபர சுவாமிகள்

**இ**ன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 1

**எ**ள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போற் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுக லாற்றின்
பிறிதொன்றும் வேண்டா தவம். 2

அறநெறிச்சாரம் ] [ முனைப்பாடியார்

**வ**லியினால் இலஞ்சங்கொள் மாந்தர் பாற்சென்று
மெலியவர் வழக்கினை விளம்பல், வாடிய
எலிகள்மார்ச் சாலத்தி னிடத்தும் மாக்கள்வெம்
புலியிடத் துஞ்சரண் புகுதல் ஒக்குமே. 1

**மா**ங்கனி வாயிற் கவ்வி
மரத்திடை யிருக்கு மந்தி
பாங்கர்நீர் நிழலை வேறோர்
பழமுணுங் குரங்கென் றெண்ணித்
தாங்கரும் அவாவிற் றாவிச்
சலத்திடை இறந்த தொப்ப,
நீங்கரும் பொறாமை யுள்ளோர்
நிலத்திடைக் கெடுவர் நெஞ்சே! 2

நீதி நூல் ] [ வேதநாயகம் பிள்ளை

## III. காதை

### 1. தீயவன் நல்லொழுக்கம் பெற்றது

**ஒ**ருவன்அன் புடைய தந்தைக்
கோரிரு புதல்வர் உள்ளார்;
இருவரில் இளையான், 'ஐய!
என்ஒரு பாகம் எற்குத்
தருக,'என் றிரந்து கேட்பத்
தந்தைதன் உரிமை யாவும்
இருவிகற் பாகப் பங்கிட்(டு)
உதவினன் நேர்மை யாக. 1

கைப்பொருள் கண்டான் தந்தை
கரைந்தசொற் பொருளைக் காணான்.
மெய்ப்பொருள் அறியான், உள்ளம்
விழைந்தசிற் றின்ப மாய
பொய்ப்பொருள் நச்சி ஓடிப்
புறம்புபோய்த் தந்தை ஈந்த
அப்பொருள் இழந்தான் ; அந்தோ !
அகதியா யினன்சின் னாளில். 2

அங்கொரு குடும்பி தன்னை
அடுத்(து)அவன் பன்றி மேய்த்துத்
திங்களோர் இரண்டு மூன்று
செல்லஅத் தேசம் எங்கும்
வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து
வெதுப்பிடும் பசிக்காற் றாளுய்
நுங்கினன் பன்றிக்கு ஊட்டும்
நொறுங்குகுற் றுமித்த விட்டை. 3

குற்றுமித் தவிடுங் கிட்டாக்
கொடும்பஞ்சம் அதிக ரிக்கச்
சற்றுளந் தெளிந்தா னாகிச்
சஞ்சலித் தழுஎ'தன் தந்தைக்(கு)
உற்றவூ ழியர்அ னேகர்
உண்டுதேக் கெறிய, யான்ஓர்
துற்றுண வின்றி ஆவி
சோர்குவல் ; இதென்துர்ப் புத்தி ! 4

'புகலொன்றும் இல்லேன் !' என்னுப்
புந்தியில் பிழையை யுள்ளி
மிகவுள முடைந்து நைந்தான் ;
மெய்ம்மனத் தாபங் கொண்டான் ;
'தகவுடைத் தாதை பக்கல்
சார்குவ னேல்தாம் பெற்ற
மகவெனப் பரிவர் அல்லால்
மறுத்திடார்,' எனத்தே றுற்றான். 5

ஒல்லையே எழுந்தான், தாதை
உத்தமக் குணம்முன் ஈர்க்க
அல்லல்செய் பசிபின் உந்த
அடுத்தனன் ; அறிந்து, தந்தை
வல்லைவந் தணைந்து, முத்தி
மகிழ்ந்தனன் ; மகவா சைக்கோர்
எல்லையு முளதோ மைந்தன்
எத்தனை பிழைசெய் தாலும் ? 6

'எந்தையே ! எந்தை யே !'என்(று)
ஏங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்தைநொந் 'துமக்கு முன்னும்
தெய்வத்துக் கெதிரு மாகப்
புந்தியற்(று) அளவில் பாவம்
புரிந்தனன் ! இனியான் உந்தம்
மைந்தனென் றுரைக்கத் தானும்
அபாத்திரன் ; மதியொன் றில்லேன் ! 7

'ஐய!மன் னிக்கச் சித்தம்
ஆயின்மற் றளிய னேன்யான்
உய்யுமா றருளி நும்பால்
ஊழியத் தொருவ னாக்கி,
வையகத் திருத்து'கென்று
வாய்திறந் தரற்றி நிற்ப,
'நையல் !'என் றருளிற் கூட்டிச்
சென்றனன் அகத்துள் நண்பால். 8

'மகன்இவன் மரித்தான் ; இன்னே
மரித்துயிர் பெற்று ளைகத்
தகவுடை விருந்தெ மர்க்குச்
சமைக்'கெனப் பணித்து மைந்தற்(கு)
உவகையின் வத்தி ராதி
உடுத்(து)அருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ்கொண் டாடி
இருந்தனன் புதல்வ னோடும். 9

இரட்சணிய யாத்திரிகம்] [எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை

## 2. மைனவும் முயலும்

பாவிகள் மோனர் போலும்
பலவிர தியர்கள் போலும்
ஒவறு சகாயர் போலும்
உறமுறைச் சுற்றம் போலும்
மேவுவர் ; அவரைச் சேரின்,
மேன்மைய ரேனும் உய்யார்
பூவையும் முயலும் முன்னேர்
பூனையைச் சேர்ந்த வாறே. 1

என்ன,'அக் கதையே'தென்றே
இனப்பற வைகள்வி னவ,
'முன்னமோர் மரத்தின் மேலே
முயங்கிநான் இருக்கும் போது
தன்னிக ரின்றி வாழும்
தனிமுயல் ஒன்று வந்தே
உன்னுமோர் பொந்திற் சேர்ந்தங்
குட்புகுந் திருந்த தன்றே. 2

'பூவையொன் றங்கு வந்'திப்
பொந்துநான் இருக்கும் வீடு ;
நீவரு வானேன்?' என்ன,
'நிழலொடு தருக்கள் சாலை
வாவிநற் கூபம் செல்லும்
வழியினில் தண்ணீர்ப் பந்தல்
சாவடி இவைக ளெல்லாம்
சகலர்க்கும் பொதுவே,' என்ன 3

'அங்கவை இரண்டும் சண்டை
ஆகிப்பின், 'மத்தி யஸ்தர்
தங்களைக் கேட்போம்,' என்று
தனிமுயல் அழைத்துப் போக,
'இங்குநாம் வழக்கா வந்தோம்
இருதலை வழக்குந் தீர்க்கும்
துங்கர்ஆர்?' என்று பூவை
சொல்லவே முயலும் சொல்லும் : 4

‘ கருதிய யமுனை யாற்றங்
கரையினில் தவத்தைப் பண்ணும்
பொருவில்கூர்ம் பல்லன் என்னும்
பூனையார் சொல்வார்,’ என்ன,
வெருவியே ‘ பூனைப் பக்கல்
மேவிநாம் சொல்வ தெவ்வா
றுரை,’எனத் ‘தூர நின்றே
உரைப்பம்,’என் றழைத்துப் போக 5

‘ இருவரும் போனார் அந்த
இருடியார் தவத்தைக் கண்டார் ;
‘ பெரியவர் இவர்தாம் நம்மைப்
பிடிப்பதும் செய்யார்,’ என்று
கருதினர் பணிந்தெ ழுந்தார் ;
கைகளும் கட்டி நின்று
பரவினார் ; யோகம் நீங்கிப்
பார்த்தனர் பூனை யாரும். 6

‘ ஆரெவர் நீங்கள் ? நம்மை
அறிந்துநீர் இங்கு வந்த
காரியம் சொல்லும் !’ என்று
கபடனார் உரைக்கத் தங்கள்
பேரொடு வழக்குஞ் சொல்லப்
‘ பெருகிய மூப்பி னாலே
நீருரைப் பதுகே ளாது ;
நெருங்கிவந் துரைக்க,’ என்ன 7

‘ சற்றிடங் கிட்டி வந்து
சாற்ற,‘இம் மாற்றம் காதில்
உற்றது போலும் பாதி
உறாதது போலுங் கேட்டோம் ;
மற்றினிப் பட்ச பாத
வழக்குநாம் உரைப்ப தில்லை ;
குற்றமிங் கொருவர் மீதிற்
கூறிடிற் கோப மாமே. 8

'தருமமே விரும்பு வாரைத்
தருமமே விரும்பிக் காக்கும்;
தருமமே இகழு வாரைத்
தருமமே இகழ்ந்து நிற்கும்;
தருமமே மெய்யாய் நின்று
சகலமும் செய்த லாலே
தருமமே சொல்வ தல்லால்
சற்றும்நாம் பொய்சொல் லோமே. 9

'எண்ணிய விரத மெல்லாம்
இயற்றினம்; இவைக்கு மேலாம்
புண்ணிய விரத மென்னும்
பொய்சொலா விரத மொன்றும்
நண்ணிய உயிரைக் கொல்லா
நலந்தரு விரத மொன்றும்
மண்ணினில் அனுட்டிப் போம்நாம்;
வழக்கிலோ ரஞ்சொ லோமே. 10

'கிட்டநீர் வந்து சொன்னால்
கேட்குநம் காது; நம்மை
விட்டுநீர் தூர நின்று
விளம்பினால் கேளா தென்று
துட்டனார் மாரீ சத்தால்
துலங்குகூர்ம் பல்லன் என்னும்
இட்டமார்ச் சாலன் சொல்ல
இவைதம துளத்தி லெண்ணி 11

'மெய்கள்போற் சொன்ன எல்லாம்
விசுவசித் திரண்டும் செல்லக்
கைகளாற் பிடித்துக் கண்டம்
கடித்திரத் தங்கு டித்தே
செய்கப டான பூனை
செருக்கியங் கிருக்கச் சேர்ந்த
மொய்சிறைப் பூவை யோடே
முயலுமங் கிறந்த தன்றே.' 12

பஞ்சதந்திரப் பாடல்] [வீரமார்த்தாண்ட தேவர்

# IV. பல்சுவை

## 1. பணம்

குணமிருந் தாலும் குலமிருந் தாலும் கொழுந்தமிழின்
மணமிருந் தாலும் மதியிருந் தாலும் வழுத்திடுவங்
கணமிருந் தாலுமோர் காசும் பெறுது ;சிங் காரஅரைப்
பணமிருந் தாலவர்க் கெல்லாரும் அஞ்சலி பண்ணுவரே.

## 2. தமிழ்

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும் ; பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைம்மணக்கும் ; சொன்னலும்
வாய்மணக்கும் ; துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டினுறு நளினந் தானே.

## 3. உலக இயல்

வாழ்வது வந்த போது மனந்தனில் மகிழ வேண்டா.
தாழ்வது வந்த தானல் தளர்வரோ தக்கோர் ? மிக்க
ஊழ்வினை வந்த தானல் ஒருவரால் விலக்கப் போமோ ?
ஏழையா யிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டி லீரோ ?

## 4. உலோபர்

மைப்போ தகமும் வளநாடும் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக் காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்திலம் இப்பாழ்ப் பணத்தி னருமையெல்லாம்
இப்போ தறிந்தனம் ஈயா உலோபர் இடத்திற்சென்றே.

## 5. தெய்வம்

கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள் !
கூட்டோடும் எங்கே குடிபோனீர் ?—பாட்டாய் !கேள்:
செல்கால மெல்லாஞ் செலுத்தினேம் ; அல்காலம்
கல்லானேம் செம்பானேம் காண்.

## 6. நாரை விடு தூது

நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் !
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய் !
நீயும்நின் மனையும்
தென்திசைக் குமரி ஆடி வடதிசைக்கு
ஏகுவீர் ஆயின் எம்மூர்ச்
சத்தி முற்ற வாவியுள் தங்கி,
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே,
'எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை இன்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்,' எனுமே.

# செய்யுட்பகுதிக் குறிப்புரை

## I. கடவுள் வாழ்த்து

1. தேவாரம் - தே + வாரம் : தெய்வத்தன்மை வாய்ந்த இசை ஒழுக்கமும் சொல்லொழுக்கமுமுடைய பாடல். தேவாரத்தைப் பாடியவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்பவர். இப்பாட்டு, திருநாவுக்கரசர் பாடியது. இவர் ஏழாம் நூற்றாண்டினர். தேவாரம் - சைவர்களுக்குரிய நூல்.

மாசு இல் - குற்றமில்லாத, மதியம் - சந்திரன், வீங்கு இளவேனில் - பகற்பொழுது மிக்குள்ள இளவேனிற் காலம், மூசு - மொய்க்கும், அறை - ஒலிக்கும், பொய்கை- குளம், எந்தை - என் + தந்தை (சிவன்), இணையடி - இரு பாதங்கள், நீழல் - நிழல், (வீணை - செவி, மதியம் - கண், தென்றல் - உடல், வேனில் - வாய், பொய்கை - மூக்கு. இவை ஐம்புல நுகர்ச்சிக்குக் கூறப்பட்டன.)

2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்: இது வைணவர்களுக்குரிய நூல்; பன்னிரு ஆழ்வார்கள் பாடியது.

கங்கையில் - கங்கையைப் போல, புனிதம் - தூய்மை (பரிசுத்தம்), நடுவுபாட்டு - நடுவிடத்தில், பொங்கு நீர் - மிக்க நீர், பூம்பொழில் - அழகிய சோலை, அரங்கம் - சீரங்கம், கிடக்கை - சயனத்திருக்கோலம் (அரங்கநாதர்), எங்ஙனம் - எவ்வாறு, வாழ்கேன் - வாழ்வேன், ஏழையேன் ஏழையேனே - அடுக்கு எளிமை பற்றி வந்தது.

## II. நீதி

1. நன்னெறி :

இது நன்மையான வழிகளைக் கூறும் நூல். இந்நூல் நாற்பது வெண்பாக்களை உடையது.

1. தொலையா - அழியாத, தோற்றத்தோம் - பிறப்பையுடையோம், தலையாயவர் - மேலான குணங்களையுடையார், செருக்கு - கர்வம், சார்தல் இலை - அடைவதில்லை, இரைக்கும் - ஒலிக்கும், வண்டு ஊதா மலர் - வண்டுகள் ஊத

மலரும் மலர்கள், ஈர்ங்கோதாய் - குளிர்ந்த மாலையையுடையவளே, மேரு வரை - மேரு மலை, வந்தன்று - வந்தது. சிவபிரான் திரிபுரமெரித்தபொழுது மேரு மலையை வில்லாக வளைத்தார். கோதை - மலர் மாலை.

2. எரியின் இழுது - தீயிலிட்ட நெய் (உருகுதல்), தெரியிழாய் - ஆய்ந்தெடுத்த ஆபரணங்களையுடையவளே, மண்டு - மிகுந்த, பிணி - நோய், கலுழும் - வருந்தும்.

## 2. நான்மணிக்கடிகை :

கடிகை - துண்டு. இந்நூலின் ஒவ்வொரு பாட்டிலும் நான்கு கருத்துக்கள் உள்ளன. இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

1. உறுப்பு - அவயவம், கொண்டான் - மணந்துகொண்ட கணவன், துன்னிய - நெருங்கிய, கேளிர் - சுற்றத்தார், ஒண்மையவாய் - ஒளி பொருந்தியனவாய், சான்ற - மேலான, ஈன்றாள் - பெற்ற தாய்.

2. திரி அழல் - விளக்குத் திரியின் தீ, தொழுப - தொழுவார்கள், விறகின் எரி அழல் - விறகு எரியும் பெருந்தீ, கைவிட்டு - நீக்கி, உலகு - உலக மக்கள்.

## 3. சிறுபஞ்சமூலம் :

இது ஐந்து வேர்களினாலான மருந்து உடற்பிணி நீக்குவது போல, ஐந்து கருத்துக்களினால் ஆன செய்யுட்கள் உளப்பிணியான அறியாமையை நீக்கும் வகையில் அமைந்தமையின், இப்பெயர் பெற்றது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. மூலம் - வேர்.

1. இல் - வீடு (குடிப்பிறப்பு), கடைப்பிடித்து - நிலையைக் கைவிடாது ஒழுகி, தான் பிறராற் கருதற்பாடுணர்ந்து - தான் பிறரால் எவ்வாறு நினைக்கப்படுவான் என்பதை அறிந்து, சாக - இறக்க, வாழான் - வாழாதவனாய், பல்யாண்டும் - பல வருடங்களும், ஆக - வாழ்க.

2. காயா - காய்க்காத, நன்று அறியார் - நன்மையை அறியாதவர், மூத்தாலும் - வயதில் முதிர்ந்தாலும், மூவார் - வயதானவராகார், நூல் தேற்றாதார் - நூல்களைப் படித்துணராதவர், பாத்தி - வரிசையாக்கி, நாறு - முளையாத.

4. நீதி நெறி விளக்கம் :

1. நோக்கு + அரும்பா = பார்வை அரும்பாகவும், அரும்பு + ஆ ; ஆ - ஆக ; நாள் மலர் - அன்று மலர்ந்த மலர், தீம் காயா - இனிய காயாகவும், வண்மை - கொடுக்கும் தன்மை, பலம் - பழம், நலம் கனிந்த - நன்மைகள் மிக்க, பண்புடையார் - குணமுடையார், சலியாத - தளராத, கற்பதரு - (விரும்பியதையளிக்கும்) கற்பக மரம்.

பண்புடையார்—கற்பதரு
நோக்கு—அரும்பு
நகை முகம்—நாள் மலர்
இன்மொழியின் வாய்மை—தீங்காய்
வண்மை—பலம்
} உருவக அணி

2. இல்லார் - கல்வியும் செல்வமும் இல்லாதவர், தம் முன்னர் - கற்றோரும் செல்வருமாகிய தங்களுக்கு முன், குறையிரந்து - குறைகளைக் கூறி யாசித்து, நிற்ப போல் - நிற்பவரைப் போல, தாமும் - தாங்களும் (உம்மை - எச்சப் பொருள்), பெறின் - பெற்றால், கற்றோரும் செல்வரும் வணக்கமுடையராதல் வேண்டும்.

5. அறநெறிச்சாரம் :

இது தரும வழிகளைச் சத்துப் போல எடுத்துக் கூறும் நூல்.

1. இன்சொல் - இனிய சொல், விளைநிலம் - விளைகின்ற நிலம் (வயல்), ஈதல் - கொடுத்தல், வித்து - விதை, வன்சொல் - கொடிய சொல், களை கட்டு - நெல்லோடு முளைக்கும் புல் பூண்டுகளாகிய களையைப் பிடுங்குவது போல் நீக்கி, வாய்மை - உண்மை, அட்டி - இட்டு, அறக்கதிர் - தருமமாகிய கதிர், ஈன - உண்டாக, பைங்கூழ் - பயிர், சிறுகாலை - இளமைப் பருவத்தில்.

இன்சொல்—விளைநிலம்
ஈதல்—வித்து
வன்சொல்—களை
வாய்மை—எரு
அன்பு—நீர்
அறம்—கதிர்
} உருவக அணி

2. எள்ளி - இகழ்ந்து, இன்னச்சொல் - கொடிய சொல், கொள்ளி - தீக்கட்டை, கொடிது - கொடுமையானது, அறிவு நீர் - அறிவாகிய தண்ணீர், அவித்து - நீக்கி, ஆற்றின் - செய்தால்.

6. நீதி நூல் :

1. வலியினல் - வலிமையினல், இலஞ்சம் - பரிதானம் (கைக் கூலி), மெலியவர் - ஏழைகள், விளம்பல் - கூறல், மார்ச் சாலம் - பூனை, மாக்கள் - மிருகங்கள், வெம்புலி - கொடிய புலி, சரண் புகுதல் - அடைக்கலமாகச் சேர்தல், ஒக்கும் - ஒப்பாகும்.

2. மந்தி - குரங்கு, பாங்கர் - பக்கம், உணும் - உண்கின்ற, தாங்க அரு அவா - அடக்க முடியாத பேராசை, சலம் - நீர்.

## III. காதை

1. இரட்சணிய யாத்திரிகம் :

இது **ஜான் பனியன்** என்பார் ஆங்கிலத்தில் எழுதிய **மோட்சப் பிரயாணம்** (Pilgrim's Progress) என்ற நூலின் மொழிபெயர்ப்பு.

1. எற்கு - எனக்கு, நிருவிகற்பமாக - வேற்றுமையின்றி, நேர்மை - ஒழுங்கு.

2. கைப்பொருள் - செல்வம், கரைந்த - சொன்ன, மெய்ப் பொருள் - உண்மையான பொருள் (அறிவுரை), உள்ளம் - மனம், விழைந்த-ஆசைப்பட்ட, சிறு இன்பம்-அற்பமான இன்பம், நச்சி-விரும்பி, புறம் போய்-வெளி நாடுகளுக்குச் சென்று, ஈந்த - கொடுத்த, அப்பொருள் - அச்செல்வம், இழந்தான்-கெடுத்திழந்தான், அந்தோ - ஐயோ, அகதி - திக்கற்றவன், சின்னளில் - சில நாட்களில்.

3. குடும்பி - குடித்தனக்காரன், அடுத்து - சேர்ந்து, திங்கள் - மாதம், நுங்கினன் - உண்டான்.

4. கிட்டா - கிடைக்காத, உளந்தெளிந்து - மனத் தெளிவு அடைந்து, சஞ்சலித்து - வருந்தி, ஊழியர் - வேலைக்காரர், தேக்கெறிய - ஏப்பம்விட, துற்றுணவு - ஒரு வாய் உணவு,

ஆவி-உயிர், சோர்குவல்-தளர்வேன், துர்ப்புத்தி-கெட்ட புத்தி.

5. புகல் - அடைக்கலமாகப் புகும் இடம், என்னு - என்று, புந்தி - புத்தி, உன்னி - நினைத்து, உளம் - மனம், நைந்தான் - வருந்தினன், மனத்தாபம் - மனவருத்தம், தகவு- தகுதி, தாதை பக்கல்-தந்தையிடம், சார்குவனேல்-அடைவேனுனல், மகவு-குழந்தை, பரிவர் - அன்பு காட்டுவர், தேறுற்முன் - மனந்தேறினன்.

6. ஒல்லையே - விரைவாக, ஈர்க்க - இழுக்க, அல்லல் செய் - துன்பம் செய்கின்ற, உந்த - தள்ள, அடுத்தனன் - வந்து சேர்ந்தான், வல்லே - விரைவு.

7. எந்தையே - என் தகப்பனே, நெட்டுயிர்த்து - பெருமூச்சு விட்டு (உமக்கு முன்னும் தெய்வத்திற்கு எதிரும்), புந்தியற்று - புத்தியில்லாமல், உந்தம் - உம்முடைய, அபாத்திரன் - தகுதியில்லாதவன், மதி - புத்தி.

8. சித்தம் - உளம், சித்தமாயின் - சம்மதமாயின், அளியனேன் - யான் அன்பு காட்டத் தகுந்தவன், உய்யுமாறு - பிழைக்கும்படி, நும்பால் - உம்மிடத்தில், ஊழியம்-வேலை, வையகம் - பூமி, நையல் - வருந்தாதே, அகத்துள் - வீட்டுள்.

9. மரித்தான் - இறந்தான், இன்னே - இப்பொழுதே, தகவு - தகுதி, எமர்க்கு - எம்மவர்க்கு, பணித்து - கட்டளையிட்டு, உவகை - மகிழ்ச்சி, வத்திராதி - ஆடை முதலானவை, அருங்கலம் - அருமையான ஆபரணங்கள், பூட்டி - அணிவித்து, புகர் அறு - குற்றம் நீங்கிய.

## 2. மைனவும் முயலும் :

இது பஞ்சதந்திரப் பாடலிலுள்ள ஒரு கதை. பஞ்சதந்திரம் - ஐந்து உபாயங்கள்.

1. மோனர் - மௌனமுடையவர் (பேசாதவர்), விரதியர் - விரதம் (நோன்பு) உடையவர், ஓவு அறு - ஒழிதல்

இல்லாத, சகாயர் - உதவியாளர், மேவுவர் - அடைவர், உய்யார் - பிழைக்க மாட்டார், பூவை - மைனா என்னும் பறவை.

2. இனப் பறவைகள் - பறவைக் கூட்டம், முயங்கி - தழுவி, நிகர் - ஒப்பு, உன்னும் - நினைக்கத் தக்க.

3. தருக்கள் - மரங்கள், வாவி - குளம், கூபம் - கிணறு, சகலர்க்கும் - அனைவர்க்கும்.

4. மத்தியஸ்தர் - நடுவு நிலையாளர் (வழக்குத் தீர்ப்போர்), இருதலை - இரு பக்கத்தாருடைய, துங்கர் - மேலானவர்.

5. வெருவி - அஞ்சி (பயந்து), உரைப்பம் - சொல்வோம்.

6. பரவினர் - வணங்கினர், இருடி (ரிஷி) - தவசி, யோகம்- தியானம்.

7. கபடனர் - வஞ்சகமுடையவர், மூப்பு - கிழத் தன்மை, கேளாது - கேட்காது.

8. சற்று - சிறிது, கிட்டி - நெருங்கி, சாற்ற - சொல்ல, இம் மாற்றம் - இவ்வார்த்தை, உற்றது - கேட்டது, உறுதது - கேளாதது, பட்சபாதம் - ஓரஞ்சொல்லுதல் (ஒரு பக்கம் சார்ந்து பேசுதல்).

9. இகழ்ந்து - கேலிசெய்து, சகலமும் - எல்லாவற்றையும்.

10. இயற்றினம் - செய்தோம், சொலா-சொல்லாத, நண்ணிய- அடைந்த, நலம் தரு - நன்மையைத் தரும், மண்ணினில்- பூமியில், அனுட்டிப்போம் - செய்து வருவோம் (மேற் கொண்டுள்ளோம்), ஓரம் - பட்சபாதம்.

11. விளம்பினல் - சொன்னல், துட்டனர் - கெட்டவரான, மாரீசத்தால் - வஞ்சனையால், துலங்கு - விளங்குகின்ற, இட்டம் - விருப்பம், மார்ச்சாலம் - வஞ்சனை, மார்ச் சாலன் - வஞ்சனையுள்ள பூனை.

12. விசுவசித்து - நம்பி, கண்டம் - கழுத்து, உதிரம் - இரத் தம், கபடம் - வஞ்சகம், செருக்கி - கர்வங்கொண்டு, மொய் - நெருங்கிய, சிறை - இறகு.

## IV. பல்சுவை

1. கொழுந்தமிழ் - வளப்பமான தமிழ், வழுத்திடும் - சிறப்பித்துக் கூறும், வங்கணம் - சிநேகம், அஞ்சலி - கை குவித்துக் கும்பிடுதல்.

2. மட்டு - தேன், ஆரும் - நிறைந்த, பரிமளிக்கும் - வாசனை வீசும், பரிந்து - விரும்பி, துய்ய - மேலான, நளினம் - இனிமை.

3. தாழ்வு - குறைபாடு, தக்கோர் - மேலோர், ஊழ்வினை - விதி, கண்டிலீரோ - நீர் பார்த்ததில்லையோ ?

4. மைப்போதகம் - கரிய யானை, செந்தமிழ் வாணர் - தமிழ்ப் புலவர், கைப்போதகம் - யானை, உலோபர் - லோபிகள், ஈயாத - கொடாத.

5. தெய்வங்காள் - தெய்வங்களே, கூட்டோடும் - குடும்பத் துடன், செல்காலம் - ஆட்சி செல்லும் காலம், அல்காலம்- செல்வாக்கு இல்லாத காலம்.

6. பிளந்தன்ன - பிளந்தாற்போன்ற, ஏகுவீர் - செல்வீர், வாவி-குளம், நனைசுவர் - மழைநீரால் நனைந்த சுவர், கனைகுரல் - ஒலிக்குங்குரலையுடைய, பாடு - படுதல்(ஒலித்தல்), எங்கோன் - எங்கள் அரசன், மாறன்-பாண்டியன், வழுதி கூடலில் - பாண்டியன் நகரமான மதுரையில், வாடை- வடக்கிலிருந்து வீசும் காற்று, மெலிந்தும் - வருந்தியும், கையதுகொண்டு-கையைக்கொண்டு, மெய்யது பொத்தி- உடலை மூடிக்கொண்டு, காலதுகொண்டு - காலைக் கொண்டு, மேலது தழீஇ-மேற்பாகத்தைத் தழுவி மூடிக் கொண்டு, பேழை-பெட்டி, பாம்பென-பாம்பு போல, உயிர்க்கும் - மூச்சு விடும், கண்டனம் - பார்த்தோம், எனுமே - என்று சொல்லுங்கள்.

மாறன், வழுதி - பாண்டியன் பட்டப் பெயர்கள்.

# அகராதி

அ

அச்சு - ஒத்த வடிவம்
அடைக்கலம் - சரணம், தஞ்சம்
அண்மை - சமீபம்
அத்தகைய - அவ்வாறான
அந்தரம் - ஆகாயம்
அரங்கேற்றம் - சபையில் நூலை அங்கீகரிக்கச் செய்தல்
அரும்பணி - சிறந்த வேலை
அறிஞர் - அறிவாளர்
அற்புதம் - ஆச்சரியம்
அன்னிய நாடு - அயல் நாடு

ஆ

ஆற்றல் - வலிமை
ஆன்ற - சான்ற, மேலான

இ

இசைதல் - சம்மதித்தல், பொருந்தல்
இடையூறு - துன்பம்
இயலும் - முடியும்
இரணிய கர்ப்பம் - தன்னளவு பொன் அளிக்குந்தானம்
இலகு - சுலபம்
இலங்கிய - விளங்கிய
இவண் - இவ்விடம்
இனம் - ஒரு வகைக் கூட்டம்
இன்னல் - துன்பம்

ஈ

ஈடுபட்டு - சேர்ந்து

உ

உணர்ச்சி - மனத்தில் எழும் உணர்வு, எண்ணம்
உத்தியோகம் - முயற்சி, வேலை
உபதேசம் - போதனை
உயர்நீதி மன்றம் - நியாயப் பேரவை, ஹைகோர்ட்டு
உயிர்ப்பித்தல் - பிழைப்பித்தல், தோன்றச் செய்தல்
உய்விக்க - பிழைக்கும்படி செய்ய
உரு - வடிவம்
உரை கல் - பொன்னின் மாற்றுக் காணும் கல்
உறுப்பினர் - அங்கத்தினர்

எ

எத்துணை - எவ்வளவு

ஏ

ஏற்றத்தாழ்வு -உயர்வும் தாழ்வும்

ஒ

ஒருப்படல் - சம்மதித்தல்

க

கண்காணிப்பாளர் - மேற்பார்வையாளர்
கமுகு - பாக்கு
கலங்கல் - கவலைப்படுதல், குழம்புதல்
கலம் – ஆபரணம், பாத்திரம், கப்பல், ஓரளவு
கலம்பகம் - ஒரு வகைப் பிரபந்தம் ; பல வகைச் செய்யுட்களும், பல வகை உறுப்புக்களும் அமையப் பாடுவது; 100 செய்யுட்களை அந்தாதித் தொடையாகக் கொண்டது.
கலை வடிவு - வித்தையின் வடிவு
கவிதை - செய்யுள், பாட்டு, பா
கவித்திறன் - செய்யுள் திறமை

கா

காட்சி - தோற்றம், பார்வை
காப்பியச் சுவை - காவிய நூல்களின் இனிமை
காலப்போக்கு - பொழுது போக்கு

கி

கிளர்ச்சி - தூண்டுதல்

கு

குடியேறி - சென்று வசித்து
குரவர் - தந்தை, தாய், ஆசான், அரசன், தெய்வம்
குன்றியிருத்தல் - குறைந்திருத்தல்

கை

கைப்பற்றல் - பிடித்தல்
கைம்மாற்று - கைக்கடன்

கொ

கொப்பரை - பெரிய அண்டா, பாத்திரம்
கொள்கை - கருத்து, எண்ணம்

ச

சடங்கு - கருமம், செயல்
சதாவதானம் - ஒருவர் நூற்றுவரை அமைத்துக்கொண்டு தம் ஞாபக சத்தி வெளிப்படச் செய்யும் ஒரு வித்தை
சம எடை - சமமான அளவு, ஒரே அளவு
சமயம் – மதம், காலம்
சமய போதனை - மதக்கொள்கைகளை உபதேசித்தல்
சமாதி - இறந்தவரைப் புதைத்த இடத்தில் கட்டும் கட்டடம்
சற்றேறக்குறைய - ஏறத்தாழ

சா

சாக்காடு - இறப்பு
சாதனங்கள் - கருவிகள்
சாறு - ரசம், விழா
சான்று - சாட்சி, உதாரணம்

சி

சித்தாந்தம் - கொள்கை
சிந்தை - மனம், கொள்கை, எண்ணம்
சின்னம் - அடையாளம், குறி

சீ

சீலம் - நல்லொழுக்கம்

சு

சுரசுரப்பு - கரடுமுரடாயிருத்தல்

சூ

சூழ்நிலை - சூழ்ந்திருக்கும் நிலை

சொ

சொற்பொழிவு - பிரசங்கம், உபந்நியாசம்

ஞா

ஞாபகசத்தி - நினைவாற்றல்

த

தடிப்பு - பருத்திருத்தல்
தத்துவ ஞானம் - கடவுள் அறிவு
தம்பிரான் - கடவுள், சைவ மடத் தலைவர்
தழுவல் - அணைதல், சேர்தல்
தனயர் - பிள்ளை, மகன்

தி

திரு - அழகு, செல்வம்
திரை - அலை, மறைவுத்துணி

து

துலாபாரம் - தராசிலேறித் தன் எடை அளவு பொன் அளித்தல்
துவர் ஆடை - காவி வத்திரம்
துறத்தல் - நீக்கல்

தெ

தெய்விகம் - கடவுள் தன்மை

தொ

தொகை மதிப்பு - விலை
தொடர்பு - சம்பந்தம்

ந

நல்வழிப்படுத்தல் - ஒழுங்கான நெறியில் அமைத்தல்
நன்னெறி - நல்ல வழி

நா

நாணயங்கள் - காசுகள்
நாயன்மார் - சிவன் அடியார்கள்

நி

நிகழ்ச்சி - நடப்பது
நியமித்தல் - ஏற்படுத்தல்
நிருவாகம் - ஏற்று நடத்தல்
நிருமாணித்தல் - தோற்றுவித்தல், உண்டாக்குதல்
நிருவாணம் - முத்தி நிலை (புத்த மதத்தில் மேலான நிலை)
நிலபுலம் - பூமியும் வயலும்
நிறுவுதல் - ஏற்படுத்தல்

நீ

நீறு - விபூதி

நெ

நெருக்கம் - கூட்டமிகுதி
நெடியவன் - நீண்டவன்

ப

பண்டம் - பொருள்
பண்டு - முன்பு, முன் காலம்
பண்டு தொட்டு - முன் காலந் தொடங்கி
பண்படுத்தல் - சீர்படுத்தல்
பதவி - நிலை
பதிகம் - பத்துச் செய்யுள் கொண்டது
பதிப்பிக்க - அச்சடித்து வெளியிட
பதிப்பித்தல் - அச்சடித்து வெளியிடல்
பந்தி - வரிசை
பரிசாக - இனமாக
பருமன் - தடிப்பு, கனம்
பல்கலைக்கழகம் - சர்வகலாசாலை
பழுப்பு - மங்கல் நிறம்
பறிமுதல் - பிடுங்கிக்கொள்ளல்

பா

பாகு பதம் - இளகிய நிலை
பாதாளம் - கீழுலகம்
பாராட்டி - சிறப்பித்து

பு

புக்கவர் - புகுந்தவர்
புனிற்றிளமை - அப்பொழுது ஈன்ற இளமை

பொ

பொருந்துவன - ஏற்பன

போ

போற்றி - துதித்து, காத்து

ம

மதமாற்றம் - மதத்தினின்றும் மாறுபடுதல்
மதி வன்மை - புத்தியின் வலிமை, அறிவுத்திறம்
மறுமலர்ச்சி - புதுமை பெறுதல்

மா

மார்க்கம் - வழி

மி

மிச்சப்படுதல் - மீதியாதல், எஞ்சுதல்
மிளிர்தல் - விளங்குதல்

மு

முனைவர் - ஊக்கம் கொள்ளுவர்
முன்னேற்றம் - உயரும் நிலை, மேல் நோக்கிச் செல்லல்

மூ

மூப்பு - கிழப்பருவம்
மூலமாக - வழியாக

மே

மேல் நிலை - உயர்ந்த நிலை
மேற்பார்வை - கண்காணித்தல்
மேனாடு - மேற்கே உள்ள நாடுகள்

வ

வகுத்தல் - பிரித்தல், வகை செய்தல்
வஞ்சினம் - சபதம்
வருவாய் - வரும்படி, சம்பாத்தியம்
வள்ளல் - வரம்பில்லாமல் கொடுப்பவன்

வா

வாக்கு - சொல்
வாக்குறுதி - உறுதி மொழி
வார்த்தல் - ஊற்றுதல்
வாழ்க்கை வளம் - வாழ்க்கைச் செல்வம்

வி

விருட்சம் - மரம்
விருத்தி - அதிகரித்தல், மேம்படுதல்
விவரம் - விளக்கம்
விஹாரம் - பௌத்தர் கோவில்

வீ

வீடு வாசல் - வீடும் வீட்டின் முன் நிலமும்

வெ

வெளியிட - வெளிப்படுத்த

வே

வேண்டுகோள் - கோரிக்கை, விரும்பிக் கேட்டல்

TB 031(?) N56
காப்பகம் 89841 சென்னை-600 008

# UMA VACHAKAM

(TAMIL)

BOOK VII FOR FORM II

(INTENSIVE STUDY)

By Vidwan R. S. SAMBASIVA SARMA

UMADEVAN & COMPANY

109-C, Mount Road, Teynampet, Madras-18

Copyright] 1956 [Price As. 10